மேழிச்செல்வம்

மாத இதழ்



MADRAS RECORD OFFICE
22 DEC 1962
MADRAS

சுபகிருது௵ கார்த்திகை௴

சென்னை மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடத் திறப்பு விழா



மத்திய விவசாயத் துறை அமைச்சர் டாக்டர் ராம்சுபா சிங் அவர்கள் திறந்து வைத்தார். மாநில முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1962-ம் ௵ நவம்பர்-டிசம்பர் ௴

"ஃபிலிப்பைன்ஸ்" தந்த தட்டப்பயிறு

சி கே. ராஜகோபாலன், உதவியாளர், சிறுதானியப் பண்ணை, கோவை-3.

ஃபிலிப்பைன்ஸ் தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய தட்டப் பயறு (காராமணி) ரகம் "E C. 455". இதன் இளம் காய்கள் ஒரு சுவையுள்ள காய்கறியாகிறது. இது கோவையிலும், சென்னை மாகாணத்தின் மற்ற பகுதிகளிலும் சாகுபடி செய்வதற்கு மிகவும் உகந்தது என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பயிரின் தோற்றம்.

*நீர்ப்பாசன வசதியிருந்தால் இதை வருடம் முழுவதும் சாகுபடி செய்யலாம்.

*நீர் தேங்காமல் வடியக்கூடிய, மண்ணும் மணலும் கலந்த பூமிகளில் இது நன்றாகச் செழித்து வளரும். நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி ஏக்கருக்கு 5 டன் 'கம்போஸ்ட்' எருப்போட வேண்டும். பின் 12′×20′ அளவுள்ள பாத்திகள் போட்டு வாய்க்கால்கள் வெட்டி இணைக்கவேண்டும்.

*விதையை வரிசையாக விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை இரண்டடியும், விதைக்கு விதை ஒன்பது அங்குலமும் வைத்து, விதை ஊன்றி நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

*விதைகள் முளைத்து வெளிவந்ததும் ஒரு முறையும், பின் 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்சினால் செடி நன்றாக வளரும்.

*விதைத்து 20 நாட்களுக்குள் கொத்தி, களை எடுக்க வேண்டும்.

*இதன் கொடிகள் தரையில் கும்பலாகப் படர்ந்திருக்கும். இதன் காய்கள் மிகவும் நீளமானவை. 1½ அடி நீளம்கூட இருக்கும். நார் இல்லாமலும், நெளிவாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

*இது ஒரு 3 மாதப் பயிர். ஆனாலும், விதைத்து 50 நாட்களுக்குள் இளம் காய்களைப் பறிக்க ஆரம்பிக்கலாம். பின்னால் வாரத்திற்கு ஒரு முறை காய்களைப் பறிக்கலாம்.

*ஏக்கருக்கு 6,000 பவுண்டு வரை கிடைக்கும்.

சமையலுக்கு மிகவும் உகந்த இளம் காய்கள் அளிக்கக் கூடிய ஒரு ரகம் இது. வீட்டுப் புழக்கடைத் தோட்டங்களுக்கு மிகவும் ஏற்றது.

இந்த உயர்தரமான E.C. 455 ரகத் தட்டக்காயின் விதை வேண்டுவோர் பருப்புவகை ஆராய்ச்சி நிபுணர், சிறுதானியப் பண்ணை, கோவை-3 என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



படத்தில் காய்களின் நீளம் பார்க்கலாம்.

764p.

உள்ளுறை

	பக்கம்.
"ஃபிலிப்பைன்ஸ்" தந்த தட்டப் பயிறு ..	2
சென்னை மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடத் திறப்பு விழாவும், வர்த்தகத் துறை கருத்தரங்கும் ..	5
திராட்சைத் தோட்டம் அமைத்தல் ..	9
நெல் நாற்றங்காலுக்கு இரசாயன உரங்கள் தேவையா ? ..	12
வடிமுனைக் குழாய் கிணறும் கோடையில் பருத்தி சாகுபடியும் ..	14
மார்கழி–தை மாத விவசாயக் குறிப்புகள் ..	16
விவசாயச் செய்திக் கதிர் ..	18
1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை ..	21
சூரப்பள்ளம் பஞ்சாயத்து விழாக் கொண்டாட்டம் ..	24
தென்னை கீழ் நடவு ..	25
கேள்வி அரங்கம் ..	26
வழிகாட்டி (நாடகம்) ..	28
விவசாயப் பெருமக்களுக்கோர் சமர்ப்பணம் ..	31

விளம்பரங்கள் :

பொட்டாஷ் ..	4
வாட்டர் டிவைனர் ..	7
ரங்கசாமி அண்டு கம்பெனி ..	8, 13
ராஜா பண்ணைத் தோட்டம் ..	12
ராலீஸ் இந்தியா லிட் ..	15
பாரீஸ் ..	17
சூரியன் மார்க் (கலப்பு உரங்கள்) ..	22
சூபர் பாஸ்பேட் ..	23
டி. ஸ்டேன்ஸ் ..	27
அவசரம் அவசரம் அவசரம் ..	30

உங்கள் நெற்பயிருக்கு

போட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa



மலர் 19 | சுபகிருதுஸு கார்த்திகைமீ—1962—நவம்பர்—டிசம்பர் | இதழ் 11

சென்னை மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடத் திறப்பு விழாவும், வர்த்தகத் துறை கருத்தரங்கும்

விளைக்கு வாங்கும் பொருள்களில் கலப்படமில்லாத நல்ல பொருளைத் தேர்ந்தெடுப்பதில் நமக்குக் குழப்பம் ஏற்படுகிறது. மிகவும் கவர்ச்சிகரமான விதத்தில் பாண்டங்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நெய், எண்ணெயிலும் கலப்படம் காணப்படுகிறது. ஆனால் 'அக்மார்க்' குறியிட்ட ஒரு டின் நெய்யோ, எண்ணெயோ வாங்கினால் அவை குணத்திற்கும், தரத்திற்கும் உள்ளடங்கியவை என்று நிச்சயமாகக் கொள்ளலாம்.

"அக்ரிகல்சரல் மார்கெடிங்" என்பதன் சுருக்கமே "அக்மார்க்" எனப்படுவது. 1937-ம் ஆண்டு அமுலாகிய "விளைபொருள் (தரமிடலும் குறியிடுதலும்) சட்டத்தின்" படி சிறந்த விளைபொருள்களும் கால்நடைப் பண்ணை பொருள்களும் "அக்மார்க்" முறைப்படி தரம் பிரித்துத் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

மாநில வர்த்தக அலுவலரின் சிபாரிசுகளின் பேரில், இந்திய அரசாங்க வர்த்தக ஆலோசகரால் அங்கீகரிக்கப் பட்டவர்களே நெய், தாவர எண்ணெய் வகைகளை 'அக் மார்க்' முத்திரையின் கீழ் தரம் பிரிக்கலாம். போதிய பணவசதியில்லாத சிறு வியாபாரிகளும் சொந்த இரசாயன கூடங்களின்றி நெய், எண்ணெயைத் தரம் பிரித்து விற்க மாநில அரசாங்கம், நெய், எண்ணெய் பரிசோதனை, தரம் பிரிக்கும் இரசாயன கூடங்களை, கரூர், கோயம்புத்தூர், ஈரோடு, சென்னை, மதுரை, விருதுநகர், சேலம் முதலிய இடங்களில் நிறுவியுள்ளது. இவ்விடங்களில் தற்பொழுது நெய் இலவசமாகவும், எண்ணெய் சொற்ப செலவிலும் தரம்பிரித்துக் கொடுக்கப்படுகின்றன.

இந்த இரசாயன கூடங்களில் பரிசோதித்து தரம் பிரிக்கப்பட்ட வெவ்வேறான நெய், எண்ணெய்களினின்றும், 'மாதிரிகள்' (Samples) எடுக்கப்பட்டு அவை சரியான முறையில் தரம் பிரிக்கப்பட்டுள்ளனவா என்று உறுதிப் படுத்தும் பொருட்டு (Test checking) இந்திய அரசாங்க வர்த்தக நெறியாண்மையின் "கட்டுப்பாடு இரசாயன கூடத்திற்கு" அனுப்பப்படும். மேலும் வர்த்தகத் துறை அலுவலர்கள் அவ்வப்பொழுது, தயாரிப்பாளர்கள் சில்லரை வியாபாரிகள், பெரு வியாபாரிகள், ஏற்றுமதி செய்பவர்கள் முதலியவர்களின் கைவசத்திலிருக்கும் நெய், எண்ணெய் முதலியவற்றை திடீரென்று சோதனை செய்து அவ்வாறு சோதனைக்கான 'மாதிரிகளை' கட்டுப் பாடு இரசாயன கூடத்திற்கு பரிசோதனை செய்வதற்காக அனுப்புகின்றனர். இவ்வாறு செய்வதால் அவற்றின் தூய்மை சிறந்த முறையில் பாதுகாக்கப்படுவதுடன், தரம் பிரிக்கும் சமயத்திலிருந்து அவற்றை வாங்கும் வரையில் கலப்படம் ஏற்படாது தடுக்கப்படுகிறது. இம் முறையில் தரம் பிரிக்கப்பட்ட நெய், எண்ணெய் குறிப்பிடப்பட்ட தரப் பாகுபாடுகளுக்கு அடங்கியுள்ளனவாகப் பாதுகாக்க, மாநில இரசாயன கூடங்களாலும், கட்டுப்பாடு இரசாயன கூடங்களாலும் சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தனியார் இரசாயன கூடங்கள், மாநில இரசாயன கூடங்கள், கட்டுப்பாடு இரசாயன கூடங்கள் இவற்றின் வேலை

கள் ஒன்றையொன்று சார்ந்ததாகும். இதற்கு முன்னதாகவே இந்திய அரசாங்கம், ராஜ்கோட், கானபூர், குண்டூர் ஆகிய மூன்று இடங்களில் கட்டுப்பாடு இரசாயன கூடங்களை நிறுவியுள்ளது.

நம் மாநிலத்தில், கடந்த 4 ஆண்டுகளில், தரம் பிரித்தலுக்கென தனிப்பணியாளர்களை அமைத்ததன் பயனாக தரம் பிரித்தல் முறை பெருமளவில் பெருகியுள்ளது.

1957–58-ல் 3,400 குவின்டால் நெய்யே 'அக்மார்க்' முறைப்படி தரம் பிரிக்கப்பட்டது. ஆனால் 1961–62-ல் 17,239 குவின்டால் வரை தரம் பிரிக்கப்பட்டது. 1957–58-ல் 3,188 குவின்டால்களே தரம் பிரிக்கப் பெற்ற நல்லெண்ணெய், கடலெண்ணெய் முதலியன, 1961–62-ல் 4,600 குவின்டால்களாக தரம் பிரிக்கப்பட்டன. வருங்காலத்தில் நம் மாநிலத்தில் பெருமளவில் எண்ணெய் வகைகளைத் தரம் பிரிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. அக்மார்க் தரம் பிரித்தல் சென்னை மாநிலத்தில் இவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட்டுள்ள காரணத்தால் வர்த்தக மேற்பார்வை நெறியாண்மை, சென்னையில், ஒரு "மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடத்தை" நிறுவ முடிவு செய்தது மிகவும் அவசியம் என்றே கூறலாம். இதனால் பரிசோதித்துத் தரம் பிரிக்கப்பட்ட நெய், எண்ணெய் வகைகள் விரைவில் மறுமுறை பரிசோதிக்கப்பட்டு முடிவு கூறவும் அவற்றின் தூய்மையை அப்பழுக்கில்லாத முறையில் பாதுகாக்கவும் ஏதுவாகிறது.

'ரோஸ்வுட்', 28, நுங்கம்பாக்கம், சென்னை என்ற இடத்தில் அமையப்பெற்றுள்ள "சென்னை மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடம்" இவ்வருடம் அக்டோபர் மாதம் 20-ம் தேதி, மத்திய விவசாயத்துறை அமைச்சர், டாக்டர் ராம் சுபா சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாநில முதல் மந்திரி, திரு. கே. காமராஜர் அவர்கள், இத்திறப்பு விழாவிற்கு தலைமை வகித்தார். மத்திய அமைச்சர், எல்லாக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கும் அடிப்படையானது போதிய வசதி கொண்ட இரசாயன கூடங்களேயாகும் என்ற கருத்து தெரிவித்தார். இந்த மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடம், மைசூர், சென்னை மாநிலங்களுக்கு நெய், எண்ணெய், தாவர எண்ணெய்கள், பழ உற்பத்திப் பொருள்கள் முதலியவற்றை தரம் பிரிக்க உதவும். இது மட்டுமல்லாது ஏற்றுமதிப் பொருள்களின் தரத்தை பாதுகாக்கும் பொருட்டு, கட்டாயத் தரம் பிரித்தலின்கீழ் கொண்டுவரக்கூடிய தாவர எண்ணெய் வகைகள், பிண்ணாக்குகள், வாசனை திரவியங்கள் முதலிய பொருள்களைத் தரம் பிரிக்கவும் இப் பரிசோதனைச் சாலை உதவும் என்று எதிர் பார்க்கப்படுகிறது என்றும் கூறினார்.

ஒழுங்கான வர்த்தக முறை, விவசாய சமூகத்திற்கே ஒரு சிறந்த காப்பாக அமைந்து அவர்கள் விளைபொருள்களுக்கு அதிக லாபம் பெற உதவும் என்றும், தரம் பிரித்தலின் அனுகூலங்களை வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் அடைய உற்பத்தியாளர்களே தரம் பிரித்தல், தரப்பாகுபாடுகள் நிர்ணயித்தல் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சென்னை முதலமைச்சர் கருத்து தெரிவித்தார்.

அக்மார்க் தயாரிப்பாளர் சங்க (Agmark Packers Association) தலைவர், மண்டல வாரியாக தரம் பிரித்தலுக்கான பாகுபாடுகளை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த சம்பவத்தில் கூறினார். திருமதி சாஸ்திரி அவர்கள், சென்னை, அக்மார்க் பொருள் உபயோகிப்பவர்களின் சங்க (Agmark Consumers' Association) தலைவராகிய திருமதி இளப்வாலா ஜாதவ் அவர்களின் உரையை படிக்கும்பொழுது, அரசாங்க உதவி கொண்டு மேலும் அக்மார்க் பண்டகசாலைகளை நம் மாநிலத்தில் அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மாநில செய்தித்துறை அமைச்சர் திரு ஜி. பூவராகன் அவர்கள், அக்டோபர் 21-ந் தேதி சென்னையில் மண்டல விவசாய வர்த்தகத்துறைக் கருத்தரங்கைத் துவக்கி வைத்தார். அபிவிருத்தி திட்டங்களை அமுலாக்குவதில், நடைமுறையில் சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்கும்பொருட்டு, விவாதித்து முடிவு காணுவதற்கு இம்மாதிரி கருத்தரங்கு நல்ல சந்தர்ப்பங்கள் அளிக்கின்றன என்று அமைச்சர் தம் உரையில் குறிப்பிட்டார்.

மத்திய உணவு விவசாய அமைச்சரவையின் வர்த்தக மேற்பார்வை அலுவலகத்தால் இக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. ஆந்திரப் பிரதேசம், கேரளா, மைசூர், சென்னை முதலிய மாநிலங்களினின்றும் 200-க்கு மேற்பட்ட வர்த்தகப் பிரதிநிதிகளும், அலுவலர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

பிற்பகல் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த மத்திய விவசாய வர்த்தக ஆலோசகர், திரு என். பி. சாட்டர்ஜி அவர்கள், கருத்தரங்கு ஆலோசனைகளனைத்தையும் ஆராய்ந்து கீழ்க்கண்ட அதன் சிபாரிசுகளை தொகுத்து முடிவு செய்தார்.

கருத்தரங்கின் சில முக்கியமான சிபாரிசுகள்

1. விற்பனைக் கேந்திரங்களிலெல்லாம் வர்த்தக முறைகளை ஒழுங்குபடுத்த, ஒழுங்கு முறை மார்க்கெட்டுகளை திட்டமிட்டு அமைத்தல் வேண்டும்.

2. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்காக நிலம் வாங்கவும், கட்டிடங்கள் கட்டவும் ஆரம்பத்தில் ஆகும் முதலீட்டிற்கு அரசாங்கம் சலுகைத் தொகையளிக்க வேண்டும்.

3. கட்டுப்பாடு விற்பனை வரியும், லைசென்ஸ் கட்டணமும் தென்மண்டல முழுவதும் ஒரே நிலையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

4. கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு தேவை ஏற்படின் பொருள்களை ஏகமனதாகத் தாமே வாங்குவதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

5. கட்டுப்பாடு விற்பனை, கூட்டுறவு விற்பனை, பண்டக சாலை (Warehouse) போன்ற வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மூன்று முக்கியமான பிரிவுகள் நெருங்கி ஒத்துழைத்தல் வேண்டும்.

6. கோதுமையைப் போன்று உணவு தானியங்கள் அனைத்திற்கும் ஒரு குறைந்த பட்ச விலை மதிப்பிடுவது பற்றி ஆராயவேண்டும்.

7. வர்த்தக சம்பந்தமான விஸ்தரிப்புப் பணியை அதிகரித்தல்.

8. தரம் பிரித்தலின் அனுகூலங்களை நேரிடையாக உற்பத்தியாளர்களே அடைவதன் பொருட்டு அவர்களே தரம் பிரித்தலை மேற்கொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும்.

9. இன்னும் அதிகமான அக்மார்க் பண்டக சாலைகளை தகுந்த விற்பனைப் பகுதிகளில் அமைத்தல் வேண்டும்.

10. நறுமணமுள்ள, நெய்யைத் தென்னிந்தியாவில் தரம் பிரித்து விற்க ஏற்பாடு செய்து, அக்மார்க் நெய்யைப் பிரபலப்படுத்த வேண்டும்.

11. கிராமிய முறையில் தயாரிக்கப்பட்ட வெண்ணெயை 'அக்மார்க்' முறைப்படி தரம் பிரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். நம் மாநில நல்லெண்ணெய்க்கு "மண்டல அக்மார்க் தரப் பாகுபாடுகள்" நிர்ணயிக்கப்பட வேண்டும்.

12. அதிகபட்ச சல்பர்-டை-ஆக்சைடு இருக்கும் நிலையை நிர்ணயிக்க கரும்பு வெல்லத்திற்கான தரப் பாகுபாடுகளை மாற்றியமைக்கவேண்டும்.

13. பெருமளவு எண்ணெயைத் தரம் பிரிக்க, வியாபார ரீதியில் எண்ணெய் வித்துக்களை தரம் பிரிப்பதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

14. அளவைப் பொறுத்து மட்டுமல்லாது எடையையும் பொறுத்து பழங்கள் தரம் பிரிக்கப்பட வேண்டும்.

15. தேனையும் (மெழுகையும்) அக்மார்க் முறைப்படி தரம் பிரிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

16. சரியான திட்ட முறையை மேற்கொண்டு மெதுவாக "கட்டாய முறையை" அக்மார்க் தரம் பிரித்தலில் புகுத்தவேண்டும்.

பிழை திருத்தம்

ஆவணி இதழ் 8-ம் பக்கத்தில் கட்டுரையின் முதல் வரியில் "50,000 டன்" என்பதை "7,50,000 டன்" என்று படிக்கவும். கோகோ மரத்தின் படத்தின் கீழ் 2-வது வரியில் "அதன்படி" என்ற வார்த்தையை நீக்கிப் படிக்கவும். "பாரஸ்உரோ" என்ற தலைப்பின் கீழ் உள்ள 2-வது பாராவில் 8-வது வரியில் "நம் தேவையையும்" என்பதறகுடுத்தாற்போல் "கிரியோலோவுக்கு உள்ள" என்ற வார்த்தைகளைச் சேர்த்துப் படிக்கவும்.

WATER DIVINER

தண்ணீர் ஊற்றுகள் கண்டுபிடிப்பதில் 27வருஷ அனுபவமிக்க நிபுணர்

மேன்மை தங்கிய சென்னை கவர்னர், திருவாங்கூர் மஹாராஜா, தென் பிராந்திய மிலிடரி தளபதி, P.W.D., C.P.W.D., முற்போக்குள்ள தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் பலராலும் ஆதரிக்கப்பட்டவர். கிணறுகள் வெட்ட ஊற்றுள்ளதும், பாறையற்றதுமான இடங்கள் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும். பழைய கிணறுகள் அடி வெட்டு வெட்டினால் அல்லது போரிங் போட்டால் பிரயோஜனப் படுமா, படாதா என்றும் ஆலோசனை கூறப்படும்.

தயவு செய்து விசாரிக்கவும் :

N. சாம்பசிவன்,
வாட்டர் டிவைனர்,
"ஸ்ரீரமண வில்லா",
41, கச்சேரி ரோட்,
மைலாப்பூர் : : மதராஸ்-4.

சென்னை மாநில காட்டு இலாகா பிரதம அதிகாரி (Chief Conservator of Forests) கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் :

வாட்டர் டிவைனர் ஸ்ரீ சாம்பசிவன், கிண்டியில் கவர்னர் பங்களாவுக்கு அருகாமையில் அமைந்துள்ள (பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்துவைக்கப்பட்ட) குழந்தைகள் விளையாடும் நந்தவனத்தில் (Children's Park) போரிங் போட இடம் குறிப்பிட்டுக் கொடுத்தார். அந்த இடத்தில் குழாய் கிணறு இறக்கியதில் அவர் தெரிவித்தபடியே திருப்தியடையும்படிக்கான அளவு தண்ணீர் கிடைத்து வருகின்றது. இந்த குழாய் கிணறு மூலம் இவ்விதம் தண்ணீர் கிடைத்திருக்காவிட்டால் குழந்தைகளது நந்தவனத்தை அபிவிருத்தி செய்திருக்கமுடியாது மதிப்பிட முடியாத இவ்வரிய சேவைக்கு ஸ்ரீ சாம்பசிவனுக்கு, சென்னை காட்டு இலாகா, நன்றி தெரிவிக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

(ஒப்பம்) C. A. R. பத்திரன், I.F.S.,
Chief Conservator of Forests, Madras,   31-8-61.

குறிப்பு :—மேற்படி நந்தவனத்தில் சவர்மெண்டாரால் அநேகம் குழாய் கிணறுகள் 500 அடி வரை இறக்கியும் தண்ணீர் கிடைக்கவில்லை. நான் குறிப்பிட்ட இடத்தில் 90 அடியில் நல்ல ஊற்றாக கிடைத்திருக்கிறது.

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்
(No. C. 1206691/61— 14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C, 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள் :—

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினால் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலை விவரம் :—

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு — — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

திராட்சைத் தோட்டம் அமைத்தல்

திரு. ஆர். பெட்டை கௌடர், கே. எம். பி. நம்பீசன், சிவ. வெங்கடேசன், கனி ஆய்வு நிலையம், பெரியகுளம்.

தென்னிந்தியாவில், மதுரை மாவட்டத்திலுள்ள மைக்கேல் பாளையத்தில் தான் முதன் முதலாக திராட்சைப் பயிர் செய்யப்பட்டதென்று சொல்லப்படுகிறது. பின்னர் திராட்சைச் சாகுபடிக்கான முதிர்ந்த அறிவும், அனுபவமும், அதன் பக்கங்களிலும் பரவலாயிற்று. எனினும் திராட்சை இம் மாநிலத்தில் இதர இடங்களிலும் வியாபாரத்திற்காகப் பயிரிடப்படுகிறது. திராட்சைப் பயிரிடுவதற்கான தகுந்த அறிவு பெற்றால், மேலும் பலர் இப் பயிரைப் பயிர் செய்வார்கள். கீழே கொடுக்கப் பட்டிருக்கும் விவரங்கள் அவர்களுக்காகவேயாகும்.

நல்ல வடிகால் வசதியுள்ள எந்த மண்ணிலும், திராட்சைப் பயிரிட முடியுமென்று இப்பொழுது அனுபவ ரீதியில் கூறப்படுகிறது. ஆறு அடி ஆழமுள்ள மண்ணும் தண்ணீர் வசதியும், இதற்கு இன்றியமையாதவைகளாகும். மதுரை மாவட்டத்தில் திராட்சை சரளைக்கல் நிலங்களில்தான் பயிர் செய்யப்படுகிறது. இருப்பினும் சிறந்த சாகுபடி முறைகளினால் இப் பயிர் நல்ல இலாபம் கொடுப்பதாயிருக்கிறது. அதிக ஈரப்பதமும், மழையுமுள்ள இடங்கள் திராட்சைப் பயிருக்கு ஏற்றதாகா. நடவேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்தவுடன், பயிரிடவேண்டிய தினிசுகளை (Varieties)யும் தீர்மானிக்கவேண்டும்.

தென்னிந்தியாவில், பச்சைத் திராட்சை, விதையில்லாத திராட்சை, கருப்புத் திராட்சை (Black Prince), பெங்களூர் நீலம், அனுப்-இ-ஷாஹி (Anab-E.Shahi) முதலியன பொதுவாகவுள்ள திராட்சைத் தினுசுகளாகும். பச்சைத்திராட்சை, நல்ல வளர்ச்சியும், அதிக மகசூலும் கொடுப்பதாயிருந்தாலும், அதன் தரத்தை உயர்த்த சில சிறந்த முறைகளைக் கையாளுதல் அவசியமாகிறது. விதையில்லாத் திராட்சை உயர்ந்த ரகமாயிருந்தபோதிலும், அதன் மகசூல் அநேக இடங்களில் குறைவாகவேயுள்ளது. விதையில்லாத திராட்சையைக் காட்டிலும், கருப்புத் திராட்சையும், பெங்களூர் நீலமும் குறைந்த வளர்ச்சியுடையதாயிருக்கின்றன. அவைகளின் தேவைகளும் குறைவே. அனுப்—இ— ஷாஹி, நல்ல வளர்ச்சியுடையதும், நிறைந்த மகசூலைக் கொடுப்பதுமாகும். இதற்கு நல்ல உரம் தேவை.

வெட்டிய குச்சிகளை நேராகவோ அல்லது பாத்திகளில் குச்சிகளைப் போட்டு வைத்திருந்து வேர்பிடித்த பிறகோ, நன்கு தயார் செய்யப்பட்ட 3′×3′×3′ அளவுகளுள்ள குழிகளில், டிசம்பர் அல்லது ஜனவரி மாதங்களில் குழிக்குக் குழி கீழே கொடுக்கப் பட்டிருக்கும் அளவுகள் விட்டு நடவேண்டும்.

பச்சைத் திராட்சை 20′×10′

விதையில்லாத திராட்சை 15′×15′

கருப்புத் திராட்சை, பெங்களூர் நீலம் 10′×10′

அனுப்-இ-ஷாஹி 25′×12½′

நடுவதற்கு முன்பு குழிகளை பத்துக் கூடை மாட்டுத் தொழு எருவும், மண்ணுங் கொண்டு நிரப்பி, ஆறப் போட்டு விடவேண்டும். வளர்ந்து வரும் கொடிகளை, மிருதுவான நாரினால், கொழு கொம்புகளோடு (Stakes) சேர்த்துக் கட்டி, அவைகளுக்குத் தவறாது நீர்ப்பாய்ச்சி வரவேண்டும்.

கொடிகள் வளர வளர அவைகளை ஒரு பந்தலின்மேல் படரவிடவேண்டும். இதற்காக, மூன்றாவது மாதத்திலேயே மாங்கிளைவைக் கால்களை 5 அடிக்கு 5 அடி அளவுகள் விட்டு நட்டு, அகத்திக் குச்சிகளை மேலே பரப்பி, ஒரு பந்தல் அமைத்தல்வேண்டும். மூன்று மாதங்களிலெல்லாம் கொடிகள் பந்தலையடைந்துவிடும். பின்னர் அதன் நுனிப் பாகத்தைக் கிள்ளி விட்டு, நல்ல வளர்ச்சியுள்ள பக்கக் கிளைகளை பந்தலில் நன்கு படர விடவேண்டும். முதல் கிளைகளில், நான்கு அல்லது ஐந்தாவது கணு (node) வினுள்ள நுனியைக் கிள்ளிவிட்டு, இரண்டாவது, மூன்றாவது கிளைகளையும் வளர விடவேண்டும். இவ் விதமாகக் கொடியை, பின்னப்பட்ட வலைபோன்று பந்தலின் மேல் படர விடவேண்டும். வளரும் கொடிகளுக்கு, அதன் வளர்ச்சியை அதிகப் படுத்துவதற்காக, மூன்று மாதங்களுக்கொருமுறை 5 கூடை மாட்டுத்தொழு எரு போடலாம். வெட்டுப் பூச்சியைத் (Girdler beetle) தடுப்பதற்காக, கொடிகளின் அடிப் பாகத்தில் “ நீலையும் டி.டி.டி. ” யைத் தடவலாம். கொடிகளின் மற்றொரு விரோதியான கறையானை, கொடிகளின் வேர்ப்பாகங்களில் “ நீலையும் டி.டி.டி.” யைக் கரைத்து ஊற்றுவதன் மூலம் தடுக்கலாம்.

பத்துப் பன்னிரண்டு மாதங்களில் கொடிகள், முதல் கவாத்து (First pruning)-க்குத் தயாராகிவிடும். முதல் தடவை கவாத்துச் செய்யும்போது, குச்சிகளின் வளர்ச்சிக்கும், தினுசுகளுக்கும் தக்கவாறு, 3 முதல் 5 கணுக்கள் விட்டு, முதிர்ந்த குச்சிகளை வெட்டவேண்டும். முதிர்ந்த இலைகளையும், நரம்புகளையும், தேவையற்ற வளர்ச்சியையும் நீக்கி விடுதல் நலம். மதுரை மாவட்டத்தில் வழக்கமாக, ஓராண்டில், ஜூன் மாதத்திலொருதடவையும், டிசம்பர் மாதத்திலொருதடவையுமாக, இரு தடவைகள் கவாத்து செய்யப்படுகின்றன. இடத்திற்கேற்றபடியும், தேவைக்குத் தகுந்தவாறும், இதைச் சற்று மாற்றிக் கொள்ளலாம். ஆனால், பிஞ்சுண்டாதலும், பழ அறுவடையும், அதிக மழை பெய்யுங்காலங்களில் வராதவாறு, நன்கு கவனித்துக் கொடிகளைக் கவாத்துச் செய்யவேண்டும்.

பயிரிடுபவர் ஒவ்வொருவரும் உரம் அல்லது எருவிடுதலையும் முக்கியமாகக் கவனித்தல் வேண்டும்.

கீழே கொடுக்கப் பட்டிருக்கும் அளவுகள் ஒரு கொடிக்கு ஓராண்டிற்குத் தேவையானவையாகும் :—

	பவுண்டு.
பசுந்தழை எரு	300
கம்போஸ்டு அல்லது மாட்டுத் தொழு எரு	300
அமோனியம் சல்பேட்	4
சூப்பர் பாஸ்பேட்	8
மியூரியேட் ஆப் பொட்டாஷ்	6

மேலே குறிப்பிட்டிருப்பவைகளை இரண்டு பாகமாகப் பிரித்து, ஒவ்வொரு தடவையும், கொடி வெட்டின பிறகு, ஒவ்வொரு பாகமாகக் கொடிகளுக்குப்போட வேண்டும். பசுந்தழை எருவையும், கம்போஸ்டையும், கவாத்துச் செய்ய ஒரு மாதத்திற்கு முன்பும், அமோனியம் சல்பேட்டையும், சூப்பர் பாஸ்பேட்டையும், கவாத்துச் செய்தவுடனேயும், பொட்டாஷிய உரத்தை 60 அல்லது 70 நாட்களுக்குப் பின்பும் போடவேண்டுமென்று சிபாரிசு செய்யப் பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பருவத்திலும் எல்லா இடங்களிலும் வேண்டிய அளவு பசுந்தாள் எரு கிடைப்பது அரிது. ஆகவே வசதியுள்ளவர்கள் தோட்டத்தைச் சுற்றிலும், மற்றும் பாதைகளின் இருமருங்கிலும் "கிளைரிசிடியா" யென்னும் பசுந்தாளெருச் செடிகளை வளர்ப்பது உபயோகமாக இருக்கும். இவைகளிலிருந்து ஆண்டிற்கு இருமுறை, திராட்சைக்கு எருவிடும் சமயங்களில், தழைகளை வெட்டியெடுத்துக் கொள்ளலாம். சணம்பு போன்ற சிறு காலப் பயிர்களைப் பயிர் செய்தும், பற்றுக் குறைக்கு பசுந்தழைகளை வாங்கியும் உபயோகிப்பது நல்லது.

திராட்சைக்கு 7 முதல் 10 நாட்களுக்கொருமுறை நீர்ப் பாய்ச்ச வேண்டும். பழங்கள் பழுத்துவரும் சமயங்களில், நீர்ப்பாய்ச்சும் இடைவெளிக் காலத்தைச் சிறிது அதிகமாக்கலாம்.

திராட்சை அநேக வியாதிகளுக்கு இலக்காகிறது. பறவைக் கண்நோய் (Anthracnose), வெண் வெட்டை (Powdery mildew), செவ் வெட்டை (Downy mildew) நோய் என்ற மூன்றும் மிகக் கொடூரம் வாய்ந்தவைகளாகும். தெள்ளுப் பூச்சிகள் (Flea beetle), சிவப்பு ஸ்பைடர் உண்ணிகள் (Red spider mites), மாப் பூச்சிகள் (Mealy bugs) முதலியன திராட்சையைக் கெடுக்கும் பூச்சிகளாகும். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் நோய்களையும் பூச்சிகளையும் தடுக்கும் முறைகளைக் கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

கவாத்துச் செய்ததிலிருந்து பழ அறுவடைக்கு கோடையில் சுமார் 110 நாட்களும், கார் காலத்தில் 95 நாட்களும் ஆகிறது. இக்காலம் திராட்சை வகைகளுக்கும், இடத்தின் தட்பவெப்ப நிலைக்கும் ஏற்றவாறு சிறிது மாறுபடும்.

நான்கு முக்கிய தினுசுகளிலிருந்தும் மதுரை மாவட்டத்தில் கிடைக்கும் மகசூல் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தினுசு.	ஏக்கருக்கு சராசரி மகசூல். பவுண்டு.
1. பச்சைத் திராட்சை	30,000
2. விதையில்லாத் திராட்சை ..	15,000
3. கருப்புத் திராட்சை (Black Prince). 4. பெங்களூர் நீலம் ..	14,000

இம் மகசூல், தனிப்பட்ட ஒருவர் பயிரிடும் பாப்பளவிற்கும், தட்டவெப்ப நிலைக்கும், மண்ணின் தராதரத்திற்கும், கண்காணிப்பிற்கும் ஏற்றவாறு, சிறிது கூடவோ அல்லது குறையவோ கூடும்.

ஸ்தாபிதமான ஒரு திராட்சைத் தோட்டத்தின் சாகுபடி விபரங்கள்

	முதல் வாரம்	இரண்டாவது வாரம்	மூன்றாவது வாரம்	நான்காவது வாரம்
ஜனவரி	புதுத் தளிர்களைக் கட்டுதல், போர்டோக் கலவை அடித்தல்.	கொடியின் நுனியையும், பக்கக் கிளைகளையும், நரம்புகளையும் நீக்குதல்.	போர்டோக் கலவை தெளித்தல். + கந்தகத் தூளைத் தூவுதல்.	கொத்திலிருந்து பழங்களைக் குறைத்தல (Thinning berries).
பிப்ரவரி	போர்டோக் கலவையைத் தெளித்தல்.	அழுகியதும், சுருங்கியதுமான பழங்களை நீக்குதல்.	பொட்டாசிய உரம் போட்டு பாத்திகளைக் கொத்திவிடுதல்.	வாரமொருமுறை தண்ணீர்ப் பாய்ச்சுதலைக் குறைத்தல்.
மார்ச்சு	அடிக்கடி நீர்ப்பாய்ச்சுதலைக் குறைத்தல்.	அழுகிய பழங்களை நீக்குதல்.	....	அழுகிய பழங்களை நீக்குதல்.
ஏப்ரல்	அறுவடை செய்தல்.	....	போர்டோக் கலவையைத் தெளித்தல்.	....

	முதல் வாரம்	இரண்டாவது வாரம்	மூன்றுவது வாரம்	நானகாவது வாரம்
மே	போர்டோக் கலவையைத் தெளித்தல்.	இரண்டடி ஆழமுள்ள கிடங்குகளில் பசுந்தழை எருவிடல்.	போர்டோக் கலவையைத் தெளித்தல்.	பந்தலைச் செப்பனிடுதல்.
ஜூன்	பாத்திகளைக் கொத்திக் களைகளை நீக்குதல்.	கவாத்து செய்தல், செய்தவுடனே, இரும்புச் சல்பேட்டும், கந்தக அமிலமும் கலந்த கலவையைக் கொடிகளுக்குத் தடவுதல்.	அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் உரங்களிடல், டி.டி.டி, 50 சத வீதத்தை தெளித்தல்.	தெள்ளுப் பூச்சிகளிருந்தால், பூச்சி கொல்லி மருந்தைத் திரும்பத் தெளித்தல்.
ஜூலை	புதுக் கொடிகளைக் கட்டுதல்.	கொடியின் நுனிப் பாகத்தையும், பக்கக் கிளைகளையும் நீக்குதல்.	0·5 சதவீதம் போர்டோக் கலவையைத் தெளித்தல். கந்தகத் தூளை தூவுதல், நரம்புகளை நீக்குதல்.	வெய்யில் குறைவாகவும் மழைத் தூரலுமிருந்தால், அரைச் சத விகிதப் போர்டோக் கலவையைத் தெளித்தல்.
ஆகஸ்டு	கொத்திலுள்ள பழங்களைக் குறைத்தல் (Thinning).	அழுகியதும், சுருங்கியதுமான பழங்களை நீக்குதல். ஒரு சதவிகிதப் போர்டோக் கலவையைத் தெளித்தல்.	பொட்டாசிய உரம் போட்டு பாத்திகளைக் கொத்தி விடுதல்.	தண்ணீர்ப் பாய்ச்சுதலைக் கொஞ்சம் கட்டுப் படுத்துதல்.
செப்டம்பர்	கொத்திலுள்ள பழங்களைக் குறைத்தல்.	அறுவடை செய்தல்.	....	ஒரு சதவிகித போர்டோக் கலவையைத் தெளித்தல்.
அக்டோபர்	....	போர்டோக் கலவையைத் தெளித்தல்.	பந்தலைச் செப்பனிடுதல்,	ஒரு சதவிகித போர்டோக் கலவையைத் தெளித்தல்.
நவம்பர்	பந்தலைச் செப்பனிடுதல்.	கிடங்குகளில் பசுந்தழை எருவிடுதல்.	ஒரு சதவிகித போர்டோக்கலவை தெளித்தல்.	பாத்திகளைக் கொத்தி சுத்தப்படுத்துதல்.
டிசம்பர்	போர்டோக் கலவை தெளித்தல்.	கவாத்துச் செய்தலும், செய்த கொடிகளை, இரும்பு சல்பேட்டும், கந்தக அமிலமும் கலந்த கலவையால் தடவுதலும்.	அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் போன்ற உரமிடுதல், டி. டி. டி. 50 சத வீதம் தெளித்தல்.	ஒடிந்த கிளைகளைக் கால்களையும், அகத்தி மரங்களையும் மாற்றுதல். ஃபிளீ பூச்சி (Flea beetle) களிருந்தால் டி. டி. டி.யைத் திரும்பத் தெளித்தல்.

கேட்கத்தவருதீர் !

பிரதி செவ்வாய்க்கிழமை மாலை 6-45 லிருந்து 7-15 மணிவரை

திருச்சி, சென்னை வானொலி நிலையங்களின் விசேஷ ஒலிபரப்பு

" கிராம முன்னேற்றச் சித்திரம் - கேள்வி அரங்கம் "

நெல் நாற்றங்காலுக்கு இரசாயன உரங்கள் தேவையா?

ஆர். எச். கிருட்டினன், அ. சுப்பிரமணியன், பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.

புழுதி நாற்றங்கால் தயார் செய்பவர்கள் தங்களால் இயன்றளவு தொழுஉரமும், சேற்று நாற்றங்கால் தயார் செய்பவர்கள் தொழு உரமோ பசுந்தாளுரமோ உபயோகப் படுத்துவார்கள். இவ்விருவகை நாற்றங்கால்களில் நாற்றுப் பறிப்பதற்கு 7 முதல் 10 நாட்கள் முன்னதாகச் சிறிதளவு அம்மோனியம் சல்பேட் போடும் வழக்கமும் சிலரிடையே இருந்து வருகிறது. இவ்வாறு நாற்றங்காலுக்கு இரசாயன உரங்கள் போடுவது தேவைதானா?

இதனை அறிய கோயம்புத்தூர், மாருதேரு, பட்டாம்பி, ஆடுதுறை முதலான இடங்களிலுள்ள ஆராய்ச்சிப் பண்ணைகளில் 1930 முதல் 1940 வரை இது சம்பந்தமான பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, ஆடுதுறை.

(1) ஒரு நாற்றங்கால் எவ்வித உரமுமின்றித் தயார் செய்யப்பட்டது. (2) இரண்டாவது நாற்றங்கால் எக்கர் ஒன்றுக்கு 2,000 இராத்தல் பசுந்தாளுரமும், 50 இராத்தல் அம்மோனியம் பாஸ்பேட்டும் போடப்பட்டுத் தயாரிக்கப் பட்டது. (3) மூன்ருவது நாற்றங்கால், எக்கருக்கு 2,000 இராத்தல் பசுந்தாளுரமும், 200 இராத்தல் அம்மோனியம் பாஸ்பேட்டும் போட்டுத் தயார் செய்யப்பட்டது. இம்மூன்று நாற்றங்கால்களிலும் ஏ.டி.டீ. 1 என்ற சிவப்புச் சிறுமணி நெல் விதைக்கப்பட்டது. நாற்றை எவ்வித உரமும் போடாத வயலில் தனித்தனியாக நட்டு அவைகளி னின்றும் வந்த பயிரின் தரத்தைக் கணக்கிட்டதில் உரமிட்ட நாற்றுக்கள், உரமிடாத நாற்றுக்களைவிட எவ்விதத்திலும் மிகுதியான விளைவினைக் கொடுக்கவில்லை. நடும்பொழுது இருந்த நாற்றின் உயர வேறுபாடும் நாளடைவில் மறைந்து விடுகிறது.

அவற்றின் முடிவுகள்—

1. நாற்றங்காலுக்கு சிறப்பாக இரசாயன உரங்கள் தேவையில்லை.

2. நடவு வயலுக்குப் போடும் உரங்கள்தான் விளைச்சலை மிகுதிப்படுத்துகின்றன.

3. நாற்றங்காலுக்கு இரசாயன உரமிடுவதால் நாற்றுக்கள் மிக உயரமாக வளர்ந்து விடுகின்றன. ஆனல் இந்த மிகுதியான உயரம் நட்டபிறகு உரமிடாத நாற்றங்காலிலிருந்து எடுத்து நடப்பட்ட பயிருக்குச் சமமாக ஆகி விடுகிறது.

4. தத்துப்பூச்சி (THRIPS) போன்ற பூச்சிகளால் தாக்கப்பட்டு வீரியம் இழந்த நாற்றுக்களுக்கு நாற்றங்காலில் சிறிதளவு இரசாயன உரமிடுதல் மிகவும் நன்மை செய்கிறது.

5. போதுமான வயதாவதற்குமுன் நாற்றைப் பறித்து நடவேண்டிய நிலை ஏற்பட்டால் அவ்வாறு நடுவதற்கு ஒருவாரம் முன்னதாகச் சிறிதளவு தழைச்சத்து இரசாயன உரத்தை நாற்றங்காலுக்குப் போடுவதால், நாற்று போதுமான வளர்ச்சியடைந்து நடுவதற்கு ஏற்றதாகிறது.

6. மேலே குறிப்பிட்ட இரு சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற வேளைகளில் நாற்றங்காலுக்கு எவ்வித இரசாயன உரமும் தேவையில்லை. அவ்வாறு போடுவதால் இரசாயன உரம் வீணுவதேயன்றி எவ்வித பலனும் கிட்டுவதில்லை.

உயர்தர பலவிதச் சிறந்த ஜாதி

காய்கறி விதைகள்

இதர புஷ்பத் தோட்ட விதைகள்
திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி

ஒட்டு மாஞ்செடிகள்

எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய

பலவிதப் பழச் செடிகள்

அலங்கார, வாசனை புஷ்பச் செடிகள்
பூச்சிநோய் மருந்துகள்
கலப்பு உரங்கள்
உபகரணங்கள்

கிடைக்குமிடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

2, டாக்டர் சிங்காரவேலு தெரு
தியாகராயநகர் சென்னை–17

தந்தி: RAJSEED. — போன்: 42262.

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய



கேடார்
அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவாணம் செய்யும்.

இந்த எல்லா ஸ்பிரேயர்களும் மானியத் திட்டத்தின்கீழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் 'ரேட் கான்ட்ராக்ட்' திட்டத்தின்படி அங்கிகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



மூன்று விதங்களில்
தூவானம் செய்யும் ஹை-ட்ரீ
லான்சுடன்கூடிய கேட்டார்
அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.



மாருத்
கையமுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.

கையாலும், சக்தியாலும் இயக்கும்
இதர பல ஸ்ப்ரேயர்களும்,
டஸ்டர்களும் நாங்கள்
தயாரிக்கிறோம்.



அசைப்பு ஸ்ப்ரேயர்
கேடார்-கோ.·.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபரோகியுங்கள்.

மற்ற விபரங்களுக்கு
கீழே கண்ட
விலாசங்களில் விசாரியுங்கள் :

தயாரிப்பாளர்கள்

போன் எண்கள் { 84221, 84245

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

தந்தி : இல்லோகஸ்ட் மலாடு.

மலாடு—பம்பாய் 64.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

03, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.

தந்தி : ஹோன்விட் போன் : 2971.

வடிமுனைக் குழாய் கிணறும் ※ ※ ※ ※ கோடையில் பருத்தி சாகுபடியும்

(த. சிங்காரவேல், பவனமங்கலம், பூதலூர் வட்டாரம்.)

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று எண்ணிய அரசினர், உழவருக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கத் திட்டமொன்று தீட்டினர். அதுவே தீவிர சாகு படித் திட்டம். பூதலூர் வட்டாரத்தில் எங்கள் ஊர் அமைந்துள்ள பெருமையினால் தஞ்சை மாவட்டத்தில் திட்டம் ஆரம்பித்த ஆண்டிலேயே எங்களுக்குப் பலன் கிட்டியது. இதனால் வாய்ப்பும், வசதியும் விரைந்து வந்தன. தீட்டிய திட்டம் செயல்படத் துவங்கியது. எங்கள் பகுதி முழுவதிலுமே வருடத்தில் இரண்டு முறை குறுவை, தாளடி என பயிரிடப்படுகிறது. ஆற்றில்

செழிப்பான பஞ்சாப் பருத்திப் பயிர்.

தண்ணீர் வருவதற்கு முன்பாகவே நாற்று தயார் செய்வது இப்பகுதி வாழ் உழவரின் இயல்பு. அதற்கென வேளாண்மைத் துறை யினர் வடிமுனைக் குழாய்க்கிணறு இறக்கி இன்ஜின் உதவியால் தண்ணீர் இறைக்க ஆவன செய்து கொடுக்கின்றனர். இம்முறை மிக்க பலன் அளிப்பது எனத் துணிந்து கடன் திட்டத்தின் கீழ் வடிமுனைக் குழாய்க்கிணறும் இன்ஜினும் பெற்றேன்.

கோடையிலும் பயிரிடலாம் !

கோடையில் அறுவடைக்குப் பிறகு பஞ்சாப் பருத்தி பயிர் செய்யலாமென்ற வேளாண்மைத் துறையினரின் விளக்கப்படி செயல்படத் துவங்கினேன்.

* அதன்படி ஒரு எக்கர் ஏழு செண்டு நிலத்தில் பஞ்சாப் பருத்தி விதைக்கப்பட்டது.

* நிலம் மூன்று முறை உழப்பட்டது.

* வரிசைக்கு வரிசை 2 அடி இடைவெளி விட்டும் வரிசையில் 9 அங்குல தூரத்திலும் விதைக்கப்பட்டது.

* வியாதி வராமல் தடுக்க விதையுடன் "அக்ரசான்" மருந்து கலந்து, விதைப்பதற்கு வசதியாக அமைய கரைத்த சாணத்தில் கலந்து உலரவைத்துப் பின் வரிசை யில் ஊன்றப்பட்டது.

* விதைத்து ஐந்து தினங்களில் தண்ணீர் விடப்பட்டது. பின்பு சுமார் 25 நாட்களில் வேண்டாத செடிகளையும், களைகளையும் போக்கி பார் அணைத்து நீர்ப் பாய்ச்சப்பட்டது.

* பழுதின்றி செடி வளர 224 .ராத்தல் அமோனியம் சல்பேட் இடப்பட்டது.

* இருமுறை பூச்சி மருந்தும் தெளிக்கப் பட்டது.

நல்ல மகசூல்.

பருத்தி சாகுபடிக்கான செலவு விவரங்கள் :—

		ரூ.	ந.பை
1.	30 ராத்தல் விதையின் விலை	7	20
2.	அக்ரசான் மருந்தின் விலை	0	30
3.	உழுது பண்படுத்த	26	00
4.	வாய்க்கால் வரம்பு போட	7	50
5.	விதைபோட	6	00
6.	இருமுறை களை எடுக்க	20	60
7.	உரமும் உரமிடலும்	41	00
8.	தண்ணீர் பாய்ச்ச	12	75
9.	இன்ஜினுக்கு எண்ணெ வாங்க	35	50
10.	பூச்சி மருந்து இருமுறை அடிக்க ஆள் கூலி உள்பட.	7	56
11.	பருத்தி எடுக்க	31	19
		195	00
12.	பருத்தியை ஆடுதுறை கூட்டுறவு பஞ்சாலைக்கு அனுப்ப.	6	70
	கூடுதல் செலவு	201	70

		ரூ.	ந.பை.
13.	280 ராத்தல் கொண்ட பொதி ஒன்று ரூ. 125 வீதம் 1,145 ராத்தல் பருத்தி விலை.	501	10
14.	பருத்தி எடுத்தபின் செடிகளைத் தழை உரமாக அதே வயலில் உழப்பட்டதின் மூலம் கிடைத்த லாபம் (8000 ராத்தல் தழை).	80	00
	நிகர லாபம்	379	40

ஒரு எக்கர் ஏழு சென்டு நிலத்தில் பருத்தி பயிரிட்டதில் ரூ. 380. எனக்கு லாபம் கிடைத்திருக்கிறது. ஆகையால் நான் வரும் ஆண்டில் மூன்று எக்கர் பரப்பில் பருத்தி பயிரிட திட்டமிட்டுள்ளேன்.

கோடையில் இருபோக நன்செய் நிலங்களிலும் பருத்தி பயிர் செய்வதை மற்றைய உழவர் பெருமக்களும் மேற்கொண்டு பயனடையுமாறு இறைஞ்சுகின்றேன்.

——(o)——

தந்தையைப்போல் தனயன்...

ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான சிலவற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனல் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம் மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILISERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

RFY-29TAM

மார்கழி-தை மாத விவசாயக் குறிப்புகள்

நெல்

(நெல் ஆராய்ச்சி நிபுணர், கோவை)

நவரை பயிரிடும் மாவட்டங்களுக்கு—

நாற்றங்கால் தயாரிப்பு ; விவசாய விஸ்தரிப்பு அலுவலரைக் கேட்டு அந்தந்த இடங்களுக்கு ஏற்ற குறுகிய கால நவரை ரகங்களை விதைக்கவும். * நடவின்பொழுது முதன்முறையாக (ஏக்கருக்கு 75 ராத்தல் அம்மோனியம் சல்பேட் என்ற விகிதத்தில்) இரசாயன தழைச் சத்து உரமிடவும். பசுந்தாளுரப் பயிர்கள் விதைக்கவும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நெல் வயல்களில் கொளிஞ்சி விதைக்கலாம்.

*** சிறந்த நவரை ரகங்கள்**

கோ. 2, 13,18,29.
டி. கே. எம். 3, 6 ; ஏ. டி. டீ. 18, 20.
ஏ. எஸ். டி. 8 ; பி. எல். ஆர். 2

தாளடிப் பயிருக்கு ஊடுழவு செய்து முதன் முறையாக இரசாயன தழைச் சத்து உரமிடுதல்.

பிந்திய சம்பா (சேலம்) பிசானப் (திருநெல்வேலி) பயிர்களில் கலப்புக் கதிர் களைதல்.

நீலகிரி —குறுவை நாற்றங்கால் தயாரிப்பு.

கோ. 13, பி டி. பி. 10 போன்ற உயர்ந்த ரகங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

சிறுதானியப் பயறு வகைகள்

(சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர், கோவை).

சென்னை பிரிவு

சி. 57 காராமணி,கோ. 1 பச்சைப்பயறு போன்ற உயர்ந்த ரகங்களை நஞ்சையில் விதைக்கவும்.

கோயம்புத்தூர் பிரிவு

ராகி.—செடிக்குச் செடி 6″ மும், வரிசைக்கு வரிசை 6″ இடைவெளியும் விடடு நடவு செய்யவும்.

தஞ்சை பிரிவு.—நெல் வயல்களில் உளுந்து விதைப்பு.

மதுரை பிரிவு.—ராகி விதைப்புக்கு ஏக்கருக்கு 5 அல்லது 6 ராத்தல் விதை போதுமானது. விவசாய விஸ்தரிப்பு அலுவலர் உதவி கொண்டு சிறந்த ரகங்களைத் தேர்ந்தெடுத்து விதைக்கவும். நாற்றங்காலில் நோய், பூச்சி விழாது கவனித்து தகுந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளவும்.

எண்ணெய் வித்துக்கள்

(எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிபுணர், கோவை).

நிலக்கடலை

இறைவை.—கோடை விதைப்புக்கு தோட்டக்கால் தயாரிப்பு—இரும்புக் கலப்பையால் (சூப்பர் கலப்பை 11 அல்லது 25 இதற்கேற்றது.) 4—லிருந்து 6 முறைகள் உழுதல் நலம்.

மானாவாரி.—எச். எம். குண்டகா 2 என்ற கருவியை உபயோகித்து இலாபகரமாக அறுவடை செய்யலாம்.

தென்னை

தோப்புகளில் பலுகு ஓட்டிக் களையெடுத்து மண்ணைப் பண்படுத்தல். போதிய வசதியுள்ள இடங்களில் (மரத்திற்கு மரம் 25′ இடைவெளி) நிலக்கடலை, காய்கறிப் பயிர்களை ஊடுபயிராக விதைக்கலாம். ஊடுபயிருக்கு இடும் உரமும், நீரும் தென்னைக்குப் பயன்படும். கருவண்டு காணப்பட்டால் குத்தூசியால் கொன்று, குருத்திலை மட்டைகளில் மணலையும், 10 சதவீதம் பி.எச.சி. மருந்தையும் சம அளவில் கலந்து வைக்கவேண்டும்.

பருத்தி

(பருத்தி ஆராய்ச்சி நிபுணர், கோவை).

கம்போடியப் பருத்தி பயிரிடும் இடங்களுக்கு—

இறைவை.—காய்ப் புழுவும், சிவப்பு நாவாய்ப் பூச்சிக் (Red Cotton Bug) காகவும் தேவைப்பட்டால் நான்காவது முறை .·.பாலிடால் தெளிக்கவும். இதனை ஒரு தாமிரம் கலந்த பூஞ்சண மருந்துடன் கலந்து தெளித்தல் நலம். களையெடுத்தல்.

பழம், காய்கறி வகைகள்

(தோட்டக்கலை நிபுணர், கோவை).

திராட்சை நடவு, கவாத்து செய்தல், உரமிட்டு மருந்து தெளித்தல். தைப்பட்ட வாழை நடவு; ஆடிப்பட்ட வாழைக்கு கொத்துக் கொடுத்தல். கோடை வெங்காயம் விதைப்பு. மலைப் பிரதேசங்களில் கோடை காய்கறி விதைப்புக்கு நிலத்தைப் பண்படுத்தல்.

Parry's

பாரியின்

காளான் மருந்துகள்

செடிகளுக்கு எந்த நோயும் வராமல் நம்பகமாகப் பாதுகாக்கும்

பாரீகாப்:

அணுத்துகளாக்கப்பட்ட தாமிர ஆக்ஸிக்ளோரைடு மற்றும் தக்க பொருள்களைக் கூட்டி பல வகை சக்திகளில் பக்குவப் படுத்திய சக்திவாய்நத காளான் மருந்து. ஜலத்தில் கரைத்துத் தெளிக்கும்படி 50% தாமிரம், பாரீகாப்-50 கலந்த பௌடராகவும், எளிதில் தூவும்படி 4% தாமிரம், பாரீகாப்-400 கலந்த பௌடராகவும் கிடைக்கின்றன.

ஸல்மைட் (ஜலசதில் கரைக்கக்கூடிய பௌடர்)

வெறும் கந்தகம் சேர்க்கப்பட்டதும், காளான் மற்றும் செடிச்சிலந்திகளைத் திறமையாக ஒழிக்கவல்லதுமான மருந்து பருத்தி, தேயிலை, ஆமணக்கு, புகையிலை, மிளகாய், ஆரஞ்சு, திராக்ஷை ஆகிய செடிகளைப் பாழாக்கும் சிலந்திகளை ஒழிக்க ஸல்மைட் நன்கு பயன்படும். ரப்பர், புகையிலை, மா, திராக்ஷை, அலங்காரச் செடிகள், காய்கறி வகைகளைப் பாதிக்கும் தேமல் நோய்களைக் கட்டுப்படுத்தவும் இது சிறந்தது.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

ஈஸ்ட் இந்தியா டிஸ்டிலரீஸ் & ஷுகர் பாக்டரீஸ் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பெர்டிலைசர் இலாகா (ஐ & எப்.) டேர் ஹவுஸ், சென்னை - 1.

Z-635TM

விவசாயச் செய்திக் கதிர்

[A. H. S. சர்மா, T. ரகோத்தமராவ், விரிவினைப் பிரிவு, கோவை.]

வடகிழக்குப் பருவக் காற்று தீவிரமடையும் மாதம் நவம்பர் மாதம். இவ்வாண்டு வடகிழக்குப் பருவ மழை திருப்திகரமாக இருந்தபோதிலும் பூச்சிகளின் தாக்கு தலைப்பற்றிய விஷயங்களைக் கேள்விப்படுகிறோம். இம் மாதத்தில்தான் விவசாயிகள் பூச்சிகளைப் பற்றி முன் ஜாக்கிரதையாக இருந்து தக்க பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும். ஆகவே இம் மாதக் குறிப்புகளில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைப் பற்றியும், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளைப் பற்றியும் கூறப்படுகிறது. அண்மையில் பூச்சி மருந்து களின் சேமிப்பிலும், உபயோகத்திலும் கவனக் குறைவாய் இருப்பதால் ஏற்படும் விபத்துக்களைப்பற்றி அதிகமாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே பூச்சி மருந்து களைப் பாதுகாப்புடன் கையாளவேண்டிய முறைகளைப் பற்றியும் இம்மாதக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக் கிறது.

பூச்சி மருந்துகளை ஜாக்கிரதையாக உபயோகிக்க. நல்ல பயிர் விளைச்சலுக்கு அத்தியாவசியமான பூச்சி மருந்துகள் மனிதர்களுக்கும், ஆடு மாடுகளுக்கும் தீங்கிழைக்கின்றன. ஆகவே இவற்றை ஜாக்கிரதையாகக் கையாள பின்வரும் வழிமுறைகளை அனுசரிக்கவேண்டும் :—

* மருந்துகளைக் குழந்தைகளும், ஆடுமாடுகளும் அண்டாவண்ணம் பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும்.

* உணவுப் பொருட்களையும், தீவனங்களையும் வைக்கும் இடங்களுக்கருகில் மருந்துகளை வைக்கக் கூடாது.

* பூச்சி மருந்துப் புட்டிகளின் மேலுள்ள சீட்டுகளைக் கிழிக்கக்கூடாது. அச்சீட்டில்தான் அம்மருந்தைப்பற்றியும், அதனால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்கும் வழி முறைகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆகவே அதை எடுத்துவிட்டால் மருந்தை உணவுப் பொருள் என்று தவருக நினைக்க ஏதுவாகும். ஆகவே மருந்துப் புட்டியையும், அதன்மேல் ஒட்டப்பட்டுள்ள சீட்டையும் குடும்பத்தில் உள்ளோர்க்கும், வயலில் வேலை செய்பவர் களுக்கும் காட்டி அப்புட்டியிலுள்ள மருந்தை பூச்சி களுக்கு அடிக்க உபயோகிக்கவேண்டும் என்றும், அது விஷத்தன்மையுடையது என்றும் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். அவ்வாறு செய்தால்தான் அவர்கள் பூச்சி மருந்துகளை ஜாக்கிரதையாக உபயோகிப்பார்கள்.

ஜாக்கிரதையாகக் கையாளுங்கள்.—மருந்துகளைக் கலக்க வெறுங் கைகளை உபயோகிக்கக் கூடாது.

* உடம்பின் எந்தப் பகுதியிலும் மருந்து தெறிக் காமல் முன் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும்.

* **மருந்துத்தூள்** அல்லது ஆவி, கண், மூக்கு ஆகிய வற்றில் செல்லாவண்ணம் கவனித்துக்கொள்ளவேண்டும்.

* மருந்தைக் கலக்கும்போதும், தெளிக்கும்போதும் சாப்பிடவோ, புகை பிடிக்கவோ, வெற்றிலை போடவோ கூடாது.

* காற்றின் திசையை ஒட்டி மருந்தடிக்கவேண்டும். எதிர்த்திசையில் அடிக்கக்கூடாது.

* உடல்நலமில்லாதவர்களையும், இளைஞர்களையும் மருந் தடிக்க விடக்கூடாது.

* காலையிலோ அல்லது மாலையிலோதான் மருந்து தெளிக்கவேண்டும்.

* மருந்து தெளித்த வயல்களின் வரப்புகளில் யாரும் நடக்காவண்ணம் எச்சரிக்கை செய்யவேண்டும். அத்தகைய இடங்களில் ஆடு மாடுகள் மேய்வதையும் தடுக்க வேண்டும்.

* மருந்தடித்தவுடன் கைகால்களையும், முகத்தையும் சோப்பால் நன்ருக கழுவுவதோடு உடம்பைத் தேய்த்துக் குளித்தபின் சாப்பிடுவதுதான் நலம்.

முதலுதவி.—மருந்து தெளித்தபின் தலைவலி அல்லது உடல் நடுக்கம் போன்ற மாற்றங்கள் ஏற்பட்டால் உடனே வைத்தியரை அணுகுங்கள். எதிர்பாராத விதமாக உடலுக் குள் மருந்து சென்றிருந்தால் உப்பு நீரை நிறையக் குடிக்கச் செய்து வாந்தியெடுக்கச் செய்யவேண்டும். வைத்தியரிடம் எந்த மருந்து விபத்தை உண்டுபண்ணியது என்ற விபரத்தைக் கூறி, அம்மருந்து வைக்கப்பட்டிருந்த புட்டி அல்லது பாத்திரத்தை அதில் ஒட்டப்பட்டிருக்கும் சீட்டோடு எடுத்துக்காட்டவேண்டும்.

உங்கள் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துங்கள்.

பருத்திக்காய்ப் புழு.—இது பருத்திச் செடியின் பூக்களை யும், மொட்டுக்களையும் சேதப்படுத்துகிறது. செடியின் குருத்துப் பாகத்தையும், மொட்டுக்களையும் தாக்கி அவற்றை உதிரச் செய்கிறது. தாக்கப்பட்ட இளம் காய்கள் உதிர்ந்து விடுகின்றன. முதிர்ந்த காய்களின் பஞ்சு நிறம் மாறி காணப்படும்.

இதைக் கட்டுப்படுத்த, விதைத்த எட்டாவது வாரத்தி லிருந்து ஆரம்பித்து மூன்று வாரத்துக்கு ஒரு முறை எண்டிரின் மருந்தை இருமுறையும், பாராத்தியான் கூட்டுப் பொருளுள்ள மருந்தை ஒரு முறையும் (ஒரு அவுன்சை 12½ காலன் தண்ணீரில் கலந்து) தெளிக்கவேண்டும்.

பருத்தி இலைச்சுருட்டும் புழு.—இப்பூச்சி பருத்திச் செடி யின் இலைகளைச் சுருட்டி அவற்றைத் தின்று சேதப்படுத்து கிறது. இவற்றின் தாக்குதல் தீவிரமாக இருந்தால் செடிகள் முழுவதும் இலைகளின்றி பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகிறது.

ஒரு இலைச்சுருட்டையில் சுமார் 30-க்கும் மேற்பட்ட புழுக்கள் காணப்படும். வளர்ந்தபின் புழுக்கள் செடியின் பல பாகங்களுக்கும் செல்கின்றன. ஒரு அவுன்சு எண்டிரினை 12 காலன் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம். பருத்திக்காய்ப் புழுவைக் கட்டுப்படுத்தக் குறிப்பிட்ட முறையில் இதையும் கட்டுப் படுத்தலாம்.

அசுவினிகளும், தத்துப்பூச்சிகளும்.—பருத்திச் செடியின் குருத்துப் பாகங்களில் கூட்டம் கூட்டமாகக் காணப்படும் சிறிய மென்மையான பழுப்பு பச்சை நிறமுள்ள அசுவினி களும், தத்தித்தத்திச் செல்லும் தத்துப் பூச்சிகளும் செடியின் சாற்றை உறிஞ்சுகின்றன. தாக்கப்பட்ட செடி கள் வலிமை குன்றி, இலைகள் சுருட்டப்பட்டு, செடியின் குருத்துப் பாகங்கள் பட்டுப்போய் செடிகள் முழுவதும் வாடிய தோற்றத்தை அளிக்கின்றன. இளம் செடிகள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. இப்பூச்சிகள் உண்டுபண் ணும் தேன்துளியில் கரும்புகைநோய் உண்டாகிறது. மேற்கூறியதுபோல் பாராதியான் கூட்டு மருந்துகளை உபயோ கித்து இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

ஆகவே எண்டிரின் மருந்தையும், பாராதியான் கூட்டு மருந்துகளையும் மூன்று அல்லது நான்கு முறை மேற் கூறியதுபோல் தெளிப்பதன் மூலம் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி அதிகமான அளவு மகசூல் அடையலாம்.

நெல் தத்துப்பூச்சிகள்.—சாதாரணமாக நெற்பயிரை வெள்ளை, பச்சை ஆகிய இருவகை தத்துப்பூச்சிகள் தாக்குகின்றன். இவை இலைகளின் சாற்றை உறிஞ்சு வதால் இலைகள் மஞ்சள் நிறமடைகின்றன. செடிகள் வளர்ச்சி குன்றி, தாக்குதல் தீவிரமாக இருப்பின் பட்டுப் போய் மகசூல் குன்றுகிறது.

இவை இரண்டும் தாவிச் செல்லும் பூச்சி (hoppers) இனத்தைச் சேர்ந்தவை. பச்சை தத்துப் பூச்சி சிறிய பச்சை நிறமுடைய பூச்சி. ஆண் பூச்சிகளின் இறக்கை களில் ஒரு கருப்புப் புள்ளி இருக்கும். வளர்ச்சியடை யாத கன்னிப் புழுக்களும் (nymph), வளர்ச்சியடைந்த பூச்சிகளும் பயிரைத் தாக்குகின்றன. இப் பூச்சி தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் வருட முழுவதும் காணப்படுகின்றன. இதன் முட்டைகள் புற்செடிகள் அல்லது நெற்பயிரின இலைத் திசுக்களில் இடப்படுகின்றன. ஒரு வாரத்திற்குள் முட்டைகளிலிருந்து வளர்ந்த பூச்சி யின் உருவை ஒத்த கன்னிப் புழுக்கள் வெளிவருகின் றன. இவை இலையின்மேல் ஊர்ந்து சென்று சாற்றை உறிஞ்சுகின்றன. இவற்றினின்றும் கசிவு போல் உண் டாகும் வெண்மையான பிசுபிசுப்பான திரவத்தில் பூஞ்சணங்கள் வளருகின்றன. இரண்டு மூன்று வாரங் களில் இவை முழுவளர்ச்சியடைகின்றன.

வளர்ச்சி முழுவதும் அடையாத பூச்சிகளையும், வளர்ந்த பூச்சிகளையும் 5% டி.டி.டீ. மருந்தை ஏக்கருக்கு 15-20 ராத்தல் வீதம் தூவுவதன்மூலமும், (DDT 50%) நீரில் கலக்கும் டி.டி.டீ. 50 சத தூள், ஒரு ராத்தலை 50 காலன் தண்ணீரில் கலந்து தெளிப்பதன்மூலமும் கட்டுப்படுத்தலாம். பூச்சிகளின் தாக்குதல் தீவிரமாக இருந்தால் பாலிடால் போன்ற, பாராதியான் போன்ற கூட்டுப்பொருள்களை உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம்,

வெள்ளைத் தத்துப்பூச்சி, பச்சை தத்துப் பூச்சியைக் காட்டிலும் உருவில் சற்று பெரியது. உடல் முழுவதும் ஒரே வெண்மையான நிறத்தை உடையது. இதனால் ஏற்படும் சேதம் பச்சைத் தத்துப் பூச்சியினால் ஏற்படும் சேதத்தை ஒத்தது. இது தனியாகவும் அல்லது பச்சைத் தத்துப்பூச்சியுடன் சேர்ந்தும் காணப்படும்.

10 சதவீதம் பி. எச். சி. தூளை ஏக்கருக்கு 15-20 ராத்தல் தூவுவதன்மூலம், அல்லது பி. எச். சி. 50% நீரில் கலக்கும் தூள் ஒரு ராத்தலை 13 காலன் தண் ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இரண்டும் சேர்ந்து காணப்பட்டால் டி. டி. டீ. 5% தூளை யும், பி. எச். சி. 10% தூளையும் கலந்து ஏக்கருக்கு 20 ராத்தல் வீதம் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத் தலாம்.

மாட்டு சிறுநீரை உரமாக உபயோகியுங்கள்.—பண்டைக் காலத்திலிருந்து நல்ல பயிர் விளைச்சலுக்கு மாட்டு உரத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகள் உணர்ந்திருக் கிறார்கள். ஆனால் பல விவசாயிகள் மாட்டு ஊத்தை உரச்சத்து வீணாகாமல் சேகரிப்பதில் அக்கறை செலுத்துவ தில்லை. சாதாரணமாக வீணாக்கப்படும் மாட்டின் சிறுநீர், மாட்டு எருவின் பயிர்ச்சத்து மதிப்பை அதிகரிக்க அத்தியா வசியம்.

சாதாரணமாக ஒரு ஜோடி எருதுகள் ஆண்டிற்கு ஆயிரம் காலன் சிறுநீர் அல்லது தினந்தோறும் மூன்று காலன் சிறுநீர் கழிக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள் ளது. இதில் சுமார் 82 ராத்தல் தழைச்சத்தும், 110 ராத்தல் பொட்டாஷ் சத்தும் அடங்கியிருக்கிறது. இதன் உரமதிப்பு ரூபாய் 70 மதிப்புள்ள 400 ராத்தல் அம் மோனியம் சல்பேட், 30 ரூபாய் மதிப்புள்ள பொட்டாஷ், ஆக ரூபாய் 100 ஆகும். ஆகவே மாட்டின் சிறுநீரை வீணாக்காமல் ஜாக்கிரதையாகச் சேகரிப்பதன் மூலம் ஆண்டுதோறும் இவ்வுரச்சத்தை மிச்சப்படுத்தலாம். மாட்டுத் தொழுவத்தில் வழிந்து செல்லும் சிறுநீரை ஒரு குழிக்குள் விட்டு சேமிக்கலாம். தினந்தோறும் இதை எடுத்து நீருடன் சேர்த்துப் பின் நிலத்தில் பயிர்களுக்குத் தெளிக்கலாம். மாட்டுச் சிறுநீரை இலைகளின்மேல் தெளிப் பது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக் கின்றன. அதன் முடிவு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

மாட்டுத் தொழுவத்தில் மண்ணைப்பரப்பி மாடுகளால் கழிக்கப்படும் சிறுநீரை அதில் ஊறவிட்டுப் பின், சிறுநீர் கலந்த அம்மண்ணை உரக்குழியில் போடலாம். பெட்டி (Loose box) முறையைக் கடைப்பிடிப்பதன் மூலமும் சிறுநீரை சேமிக்கலாம்.

உங்கள் பருத்திப் பயிருக்கு உரமிடுங்கள்.—மானாவாரிப் பருத்தி எக்கருக்கு சுமார் 20 ராத்தல் தழைச்சத்தும், இறைவைப் பருத்தி எக்கருக்கு 40—60 ராத்தல் தழைச்சத்தும் எடுத்துக்கொள்கின்றன. இதை ஈடுசெய்ய இறைவைப் பருத்திக்கு எக்கருக்கு விதைக்கும்போது 100 ராத்தல் கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்டும், இரண்டு மாதங்களுக்குப்பின் இன்னொரு 100 ராத்தலும் இடலாம். இரண்டாவது முறை இடும் உரம் காய்பிடிக்க உதவும்.

மானாவாரிப் பருத்திக்கு திருப்திகரமான அளவு மழை இருக்கும்போது, எக்கருக்கு 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் இடுவதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம் என்று ஆராய்ச்சிகளின் மூலம் தெரிகிறது. அம்மோனியம் சல்பேட்டுக்குப் பதில் அதைவிட டன்னுக்கு ரூ. 50 விலை குறைவாகக் கிடைக்கும் கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் இடலாம். யூரியாவை மானாவாரிப் பயிருக்கு இலைகளின் மேல் தெளிப்பது சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் முடிவை ஆவலுடன் எதிர்பார்க்கலாம்.

பயிர்களுக்குச் சிக்கனமாக நீரை உபயோகித்தல்.—நிலங்களுக்கு ஏற்றங்கள் மூலம் நீர் இறைக்கும் விவசாயிகள் நீரை வீணாக்காமல் சிக்கனமாக உபயோகிப்பதின் அவசியத்தை உணர்வர். ஆனால் நதி, ஏரி, குளம் ஆகியவற்றின் நீரைப் பாசனத்துக்கு உபயோகிக்கும் விவசாயிகள் நீரைச் சிக்கனமாக உபயோகிப்பதில் தக்க அக்கறையின்றி, தேவைக்கும் அதிகமாக நீரை உபயோகிக்கிறார்கள். இவ்வாறு செய்வதுதான் இறைவைச் சாகுபடி விவசாயத்தில் ஏற்படும் தீங்குகளுக்குக் காரணம். வீணாகும் நீரால் பயிர்ச் சாகுபடிக்கு உபயோகப்படாத நிலங்கள் அதிகரிக்கின்றன. ஏனெனில் அவ்வாறு வீணாகும் நீரை, பாசன வசதியில்லாததால் பயிராகாமல் இருக்கும் நிலங்களுக்கு உபயோகிக்கமுடியாமல் போய்விடுகிறது.

ஒவ்வொரு பயிரும் நன்கு வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீர் தேவைப்படுகிறது. பரிசோதனைகளின்மூலம் நெல், கரும்பு, சோளம், இறைவைப் பருத்தி ஆகிய பயிர்களுக்கு முறையே 70, 75, 20, 30 எக்கர் அங்குல நீர் தேவைப்படும் என்று தெரிகிறது. ஒரு எக்கர் நிலத்தில் ஒரு அங்குல உயரத்துக்குத் தேவையான நீரின் அளவே ஒரு எக்கர் அங்குலம் எனப்படுகிறது. இதன் அளவு 21,125 காலன் ஆகும். ஒவ்வொரு பயிருக்கும் தேவையான நீரின் அளவு மாறுபட்டாலும் மேற்கூறிய அளவுகளைத் தோராயமாக எடுத்துக் கொள்ளலாம். பயிர்களுக்குத் தேவைப்படும் மேற்கூறிய அளவு நீரை நிலத்தில் படரும் வேர்மண்டலம் ஈரமாகும்படி வீணாக்காமல் உபயோகிக்கவேண்டும். வேர் மண்டலத்திற்கப்பால் செல்லும் நீர் பயிருக்கு உபயோகமாகாததால் வீணாகிறது. அவ்வாறு செல்லும் நீரில் பயிர்ச்சத்துக்களும் கரைந்து வீணாகிறது.

பயிர்களுக்குத் தேவைப்படும் நீர் அதன் வளர்ச்சிப் பருவத்தை ஒட்டி மாறுபடுகிறது. பயிர்கள் பூக்கும் பருவம் வரை அதிகமான நீரை எடுத்துக் கொள்கின்றன. அதற்குப்பின் நீரின் தேவை குறைந்து பயிர் முதிர்ச்சியடையும் தருவாயில் மிகக் குறைந்த அளவு நீரே தேவைப்படுகிறது. சாதாரணமாக, நெற்பயிரைத் தவிர மற்ற எல்லா பயிர்களுக்கும் நீண்ட இடைவெளிவிட்டு நிலத்தில் நீர் ஆழமாக வேர்மண்டலத்தில் செல்லுமாறு பாசனம் செய்வது, ஆழம் குறைவாக குறைந்த இடைவெளியில் பாசனம் செய்வதைக் காட்டிலும் சிறந்தது. ஏனெனில் இவ்வாறு செய்வதால் பயிர்களின் வேர்மண்டலம் ஈரமாவதில்லை. பயிர்களுக்கு தேவைக்கும் அதிகமாக அளிப்பதைவிட தேவையான அளவு நீர்ப்பாசனம் செய்வதே சிறந்தது.

தீவனத்துக்குக் குதிரை மசால்.—பண்ணையிலுள்ள ஆடு மாடுகள் ஆரோக்கியமாக வாழ, புரதச்சத்து மிக்க கடலைப் பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்ற சத்துமிக்க தீவனங்கள் அவசியம். ஆனால் அவற்றின் விலை மிக அதிகம். ஆகவே பல விவசாயிகள் தங்கள் ஆடுமாடுகளுக்கு இவற்றை தீவனமாக இடஇயலாத நிலையில் இருக்கிறார்கள். இவை தேவையான அளவு ஆடுமாடுகளுக்கு இடாவிட்டால் வேலைசெய்யும் எருதுகள் வலிமை குன்றி வேலை செய்யும் திறனை இழக்கின்றன. கறவைப் பசுக்களின் பாலின் அளவும் குறைகிறது.

ஆகவே சத்துமிக்க விலை அதிகமான இத்தீவனப் பொருட்களுக்குப் பதில் புரதச் சத்து மிக்க பயறு வகைப் பயிர்களைத் தீவனப்பயிர்களாக உபயோகிக்கலாம்—புரதச் சத்துமிக்க குதிரை மசால் இவ்வகுப்பைச் சேர்ந்தது. மாடு ஒன்றுக்கு நாளுக்கு 5 ராத்தல் குதிரைமசாலைத் தீவனமாக அளிப்பதன் மூலமாக ஒரு நாளுக்குத் தேவையான சத்துமிக்க தீவனப் பொருட்களின் (concentrates) அளவை மிச்சப்படுத்தலாம். இப்பயிரை கிணறுகளுக்கு அருகில் ஒரு சிறிய நிலப்பகுதியில் வெகு சுலபமாக சாகுபடி செய்யலாம். நல்ல பாசன வசதியுடன் நேர்த்தியான முறையில் சாகுபடி செய்தால் எக்கருக்கு 60,000 ராத்தல் வரை மகசூல் கிடைக்கும். இது தொடர்ந்து வளரும் பயிராதலால் 6—8 வாரத்துக்கு ஒரு முறை அறுவடை செய்து தீவனமாக ஆடுமாடுகளுக்கு இடலாம். உங்களுக்கு அருகாமையிலுள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலர் இப்பயிர் சாகுபடி சம்பந்தமான விஷயங்களையும் விதைகளையும் அளித்து உதவி புரிவார்.

பண்ணைக்கு வேலியிடுதல்.—ஆடு மாடுகளாலும், மனிதர்களாலும் வயல்களிலுள்ள பயிர்களுக்குச் சேதமுண்டாவதைத் தடுக்க வயலைச் சுற்றி வேலியிடுவது அவசியம்.

வயல்களைச் சுற்றி வேலியிடுவதும் அதைக் கண்காணிப்பதும் விவசாயிகளுக்கு ஒரு பிரச்னையாகவே இருக்கிறது. வயல்களைச் சுற்றிலும் முள்வேலியை இடலாம். ஆனால் செலவு அதிகமாகும். நம் நாட்டில் விவசாயிகளிடையே வயல்களைச் சுற்றிலும் உயிர் வேலியிடுவது பழக்கமாக இருந்து வருகிறது. நிலத்தின் மதிப்பு அதிகமாகிக் கொண்டுவரும் இந் நாட்களில் உயிர்வேலி அமைப்பதால் சாகுபடிசெய்யக்கூடிய நிலத்தின் பரப்பு வீணாவதோடு உயிர்வேலிக்காக வளர்க்கப்படும் செடிகளின் வேர்கள் பயிர்சாகுபடி செய்யப்படும் நிலத்திலும் படர்ந்து நீர், உணவுச்சத்து ஆகியவற்றை எடுத்துக்கொள்வதால் விவசாயிகள் வயல்களைச் சுற்றிலும் முள்வேலி அமைப்பதற்கும், உயிர்வேலி அமைப்பதற்கும் ஆகும் செலவைக் கணக்கிடுவது நல்லது. உயிர் வேலிகள் நிலத்தைச் சுற்றிலும் பல அடி அகலத்தை அடைத்துக் கொண்டிருந்தால் அத்தகைய உயிர் வேலிகளுக்குப் பதில் முள்வேலி இடுவது இலாபகரமாக இருக்கும். இடத்திற்கு இடம் விவசாய நிலைகள் மாறுவதால் அதற்குத் தக்கவாறு உற்ற முறையில் வேலியிடவேண்டும்.

முட்கள் நிறைந்த பல செடிவகைகளை உயிர்வேலியாக அமைக்கலாம். தற்காலத்தில் முட்களற்ற கிளைரிசிடியா, ஐபோமியா சிறந்த வேலிச்செடிகளாகக் கருதப்படுகின்றன. இவற்றை வயல்களைச் சுற்றிலும் நெருக்கமாக நட்டு, அடிக்கடி பக்கவாட்டில் வளரும் கிளைகளை வெட்டிவிட்டால் இச் செடிகள் அடர்த்தியாக வளர்ந்து நேர்த்தியான வேலியாக விளங்கும். இவை வறட்சியைத் தாங்கும் சக்தி வாய்ந்தன. ஆண்டுக்கு 20—25 அங்குலம் மழைப் பொழிவுள்ள இடங்களில் நீர்ப்பாய்ச்சுதல் இன்றியே இவை செழித்து வளரும். இவற்றின் இலைகள் வயல்களுக்கு இடும் பசுந்தழைகளாகவும் உபயோகமாகின்றன.

உங்கள் வேலியைச் செப்பனிட்டு, கிளைரிசிடியா, ஐபோமியா நட இதுவே தக்க தருணம்.

1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், ம. வி. ஜயராமன், விவசாயக் கால நிலை ஆராய்ச்சிப்பிரிவு, கோவை.)

இம்மாத முதல் நாளன்று ஒரு மெல்லிய உயர் வெளிக் குறையழுத்தம் தென்மேற்கு வங்கக் கடலிலிருந்து மறுநாள் தென் தீபகற்பத்தின்மேல் ஊர்ந்து இருநாட்களில் பயனற்றதாயிற்று. இதன் பயனால் இம்மாத முதலிரண்டு நாட்களில் சென்னை இராச்சியத்தில் மழை ஆங்காங்கும் தொடர்ந்து இரு நாட்களில் சிற்சில இடங்களிலும் பெய்தது. மேலும், தென்மேற்கு பருவ மழை மேற்கு கடற்கரையில் வலிவுற்று, தமிழ் நாட்டில் 5-ம் தேதியன்று ஆங்காங்கு மழை பெய்தது. ஒரு குறையழுத்த அலை மேற்கு நோக்கி ஊர்ந்து 8-ம் தேதியன்று வங்கக் கடலில் ஒரு குறையழுத்தத்தை தோற்றுவித்தது. இக் குறையழுத்தம் மறு நாள் காகிநாடா அருகே கரையைக் கடந்து சிறிது வலிவிழந்து மேற்கு நோக்கிச் சென்று 11-ம் தேதியன்று அராபிக் கடலில் பிரவேசித்தது. இதனால் பருவ மழை ஆந்திரம் முதலிய பிரதேசங்களில் வலிவுற்றது. ஆனால் 6-ம் தேதி முதல் ஆறு நாட்களில் தமிழ் நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது, இடையே 8-ம் தேதிகளில் வறட்சி நிலவியது. 13-ம் தேதியன்று ஒரு சிறு குறையழுத்தம் மேற்கு மத்திய வங்கக் கடலில் தோன்றி வலிவுற்று, 18-ம் தேதியன்று கோபால்பூர் அருகே கரையைக் கடந்தது. இதன் பயனாய் 13-ம் தேதி முதல் நான்கு நாட்கள் தமிழ் நாட்டில் ஆங்காங்கு மழை பெய்தது. அதன் பின்னர் 17, 20, 22-ம் தேதிகளில் நிலவிய வறட்சியைத் தவிர மற்ற தினங்களில் இம்மாதம் முடிய சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால், 26, 28-ம் தேதிகளில் மட்டும் மழை ஆங்காங்கு பெய்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.—செங்கல்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் மழை பரவலாக பெய்தமையால் நெல் முதலிய எல்லாப் பயிர்களும் மிகப் பயனடைந்தன. நெற்பயிரில் சிறிதளவு குருத்துப் பூச்சி கண்டது, வட ஆற்காட்டிலும் மழை கரும்பு, நெல் ஆகிய பயிர்களுக்கு ஏற்றதாயிருந்தது. தென் ஆற்காடு மாவட்டத்தில் மழை சற்று மிகுதியாகவே பெய்து பயிர்களுக்கு நன்மை பயத்தது. இருந்தபோதிலும் நிலக்கடலைப் பயிரை சுருள் பூச்சி கடுமையாகத் தாக்கிற்று. சிறிதளவு செடி வாடல் நோயும் (Wilt) காணப்பட்டது. தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் மழை முன்பட்ட குறுவைப் பயிருக்குச் சிறிது சேதத்தையும், பின்பட்ட குறுவைப் பயிருக்குச் நன்மையும் விளைவித்தது. சம்பா பயிர் நடவுக்கு இம்மழை மிகவும் ஏற்றதாயிருந்தது. முன்பட்ட குறுவைப் பயிரில் சிறிதளவு குருத்துப் பூச்சி கண்டது. நெற்பயிரை பொதுவாக த்ரிப்ஸ் (Thrips), வெட்டுக்கிளிகள், தத்துப் பூச்சிகள் ஆகியவை சிறிதளவு தாக்கின. பட்டுக்கோட்டை பகுதிகளில் நிலக்கடலைப் பயிரை கம்பளிப் பூச்சிகள் தாக்கின. மழையினால் குளங்களுக்கு சிறிது தண்ணீர் கிடைத்தது. மதுரை மாவட்டத்தில் இம்மாத முற்பகுதியிலும் கடைசியிலும்தான் மழை பெய்தது. ஆகையால் மானாவாரிப் பயிர்கள் சிறிதளவு பாதிக்கப்பட்டன. நிலக்கடலைப் பயிரை கம்பளிப் பூச்சிகள் தாக்கின. ராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களில் போதிய அளவு மழையின்மையால் குளங்களும், ஏரிகளும் பெரும்பாலும் வறண்டிருந்தன. பெய்த சிறிது மழை மானாவாரிப் பயிர்களுக்கு மிகவும் நன்மை பயத்தது. சாத்தூர் பகுதிகளில் நிலக்கடலைப் பயிரை கம்பளிப் பூச்சிகள் தாக்கின. கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையினால் முற்றிய நெற்பயிர் சிறிதளவு சேதமடைந்தது. நெல் நாற்றங்கால்களில் தத்துப் பூச்சி (Jassids) கண்டது. இம் மழை பூக்கும் மாமரங்களுக்கு உதவிற்று. சேலம் ஜில்லாவில் மழையினால் மானாவாரிப் பயிர்கள் மிகவும் பயனடைந்தன. சில இடங்களில் நிலக்கடலையை கம்பளிப் பூச்சிகள் தாக்கின. கோவை ஜில்லாவில் மழை போதிய அளவில்லாததால் மானாவாரிப் பயிர்களின் வளர்ச்சி குன்றியது. பல இடங்களில் நிலக்கடலையை கம்பளிப் பூச்சிகள் கடுமையாகத் தாக்கின. பொள்ளாச்சி பகுதிகளில் நிலக்கடலை மகசூல் மிகவும் குறைவு. பருத்தியில் அசு, த்ரிப்ஸ் (Thrips), தத்துப் பூச்சிகள் ஆகியவை கண்டன. இம்மாதம் தோட்டக்கால் நிலங்களில் பருத்தி விதைப்பு பூர்த்தியாயிற்று. ஆனால், போதிய மழையின்மையால் மானாவாரி நிலங்களில் பருத்தி விதைக்க முடியவில்லை. நீலகிரி ஜில்லாவில் மழையினால் உருளைக்கிழங்குப் பயிரும் தோட்டங்களும் பயனடைந்தன. இரண்டாம் போக உருளைக்கிழங்கு பயிரையும் அழுகல் நோய் (Late Blight) தாக்க ஆரம்பித்தது. தக்க நடவடிக்கைகளால் இந்நோய் பரவுதல் தடுக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் குறிப்பிடத்தக்க மழை அளவுகளும், பிராந்திய மழை அளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழை அளவுகள் (அங்குலத்தில்)

தேதி. (1)	இடத்தின் பெயர். (2)	மழைஅளவு. (3)
1—9—1962	தொண்டி	3·15
4—9—1962	குடியாத்தம்	3·25
13—9—1962	வேலூர்	3·15
14—9—1962	சேலம்	2·36
16—9—1962	ஆடுதுறை	2·83
16—9—1962	நாகப்பட்டிணம்	2·76
26—9—1962	திண்டிவனம்	2·76

தென்னகம் எங்கும் பெரும்பாலான விவசாயிகள் பல்லாண்டுகளாக
ஒருமுகமாகப் பாராட்டி

"சூரியன்" மார்க் கலப்பு உரங்களை

வாங்குவதின் காரணம்:

✽ சர்க்காரின் அங்கிகாரம் பெற்றிருக்கிறது.

✽ பயிர் உணவுகளின் சத விகித சத்துப் பொருள்கள் உத்திரவாத மளிக்கப்பட்டிருக்கிறது.

✽ நிலங்களின் செழுமையை நீடித்துப் பாதுகாத்து அமோக விளைச்சலைத் தருவதில் முன்னணியில் நிற்கின்றது.

COIMBATORE CHEMICALS & FERTILISERS LTD. (PODANUR) SUN BRAND

Regd. No.
156902

சில்களுடன் கூடிய "சூரியன்" மார்க் கலப்பு உரங்களை கவனித்து, இந்த உரமிடுங்காலத்திலும் சகல பயிர்களுக்கும் உபயோகித்து, மகசூலைப் பெருக்குங்கள். தங்களூர் அருகிலுள்ள எமது அத்தாட்சி பெற்ற விற்பனையாளர்களிடம் கண்ட்ரோல் விலைக்கே வாங்கிப் பயனடையுங்கள்.

விவரங்களுக்கு :—

கோயமுத்தூர் கெமிகல்ஸ் & பெர்டிலைசர்ஸ் லிட்.,
457, வைசியாள் வீதி ✽ கோயம்முத்தூர்-1.

கேரளா கிளை :—54, புதுப்பரியாரம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் P. O., பாலக்காடு-2.

பிராந்திய மழை அளவு (அங்குலத்தில்)

பிராந்தியத்தின் பெயர். (1)	செப்டெம்பர் மாத மொத்த மழை அளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
வட பிராந்தியம்	6·0	+0·7	சற்று அதிகம்.
கீழ்க்கரைப் பிராந்தியம்	5·1	+1·0	அதிகம்.
மத்தியப் பிராந்தியம்	4·5	+1·4	அதிகம்.
தென் பிராந்தியம்	2.9	+1·1	ஷை
மலைப் பிராந்தியம்	5·9	+0·2	சற்று அதிகம்.

1962-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை மழை அளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர். (1)	செப்டெம்பர் மாத மொத்த மழை அளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	1962-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து மொத்த மழை அளவு. (4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்)	5·0	+0·4	30·1
திரூர்குப்பம்*	4·0	—0·5	26·1
வேலூர்	9·7	+2·8	30·8
குடியாத்தம்*	5·1	..	24·6
கீழ்க்கரைப் பிராந்தியம்			
பாலூர்	2·9	—1·4	14·7
திண்டிவனம்*	7·1	+3·6	26·1
கடலூர்	7·5	+2·3	21·3
நாகப்பட்டிணம் ..	5·5	+2·2	19·9
ஆடுதுறை*	4·9	†	22·6
பட்டுக்கோட்டை* ..	2·5	—0·9	17·9
மத்தியப் பிராந்தியம்			
சேலம்	7·6	+1·6	32·5
கோயம்புத்தூர்* ..	1·4	+0·5	13·5
கோயம்புத்தூர் ..	1·3	—0·3	12·8
திருச்சிராப்பள்ளி ..	7·7	+3·7	18·9
தென் பிராந்தியம்			
மதுரை	3·6	—1·1	14·6
பாம்பன்	1·1	—0·1	8·8
கோவில்பட்டி*	1·7	—0·3	10·5
பாளையங்கோட்டை ..	3·7	+2·6	14·4
அம்பா சமுத்திரம்* ..	3·2	+2·2	20·8
நாகர்கோவில்* ..	3·7	+2·0	31·3
கன்யாகுமரி*	3·5	+2·7	19·6
மலைப் பிராந்தியம்.			
கோடைக்கானல் ..	5·8	—1·5	38·2
கூனூர்*	5·5	+1·7	33·0
உதகமண்டலம்* ..	5·1	—1·2	41·6
நஞ்சநாடு*	7·2	+1·8	53·5

குறிப்பு.—* சென்னை விவசாய இலாக்காவின் கால நிலை ஆராய்ச்சிப் பண்ணைகள்.

† சரியான மதிப்பு எண் 0·01

சூபர்பாஸ்பேட்டை

உபயோகித்து உங்கள் வயல்களின் சாகுபடியை அதிகரியுங்கள்

நைட்ரோஜன் உரத்துடன் சூபர்பாஸ்பேட்டை சேர்த்தால் நிலத்தின் வளம் அதிகரிக்கும். விளைச்சல் அதிகம் காணும். பயிரின் தரமும் உயரும்—இவைகளினால் உங்கள் வயல்களிலிருந்து அதிக லாபமும் கிடைக்கும்.

சூபர்பாஸ்பேட் [illegible] யோகிக்க வேண்டும்

- சூபர்பாஸ்பேட் எல்லா பயிர்களுக்கும் போடத் தகுதியான பாஸ்பேட உரம்—பயிர் வளர்ச்சிக்கு இணையற்றது.
- சூபர்பாஸ்பேட் சிறு நாற்றுகளின் அபிவிருத்திக்கு மிகவும் அவசியம். மேலும் பயிர்களின் வேர்களை பெருக செய்வதுமல்லாமல், அவைகளை சீக்கிரமாக முதிரசெய்து தான்ய அபிவிருத்தியையும் கொடுக்கிறது.
- சூபர்பாஸ்பேட்டில் 16% தண்ணீரில் கரையும் பாஸ்பாரிக் அமிலம் இருக்கிறது. எனவே பயிருக்கு சீக்கிரமாகவும், சுலபமாகவும் பயன்தருகிறது.

உங்கள் வயலுக்கு சூபர்பாஸ்பேட் தேவை

முழு விபரங்களுக்கு : தென் பிராந்திய மண்டலக்குழு, இந்திய உரச்சங்கம்
தபால் பெட்டி 12, சென்னை-1

FDS/FA/I A TN

பஞ்சாயத்து செய்தி

சூரப்பள்ளம் பஞ்சாயத்து விழாக் கொண்டாட்டம்

எஸ். பாண்டிப்பெருமாள், பி.எஸ்ஸி. (ஏஜி), மாவட்ட விவசாய அலுவலர், பட்டுக்கோட்டை.

பஞ்சாயத்துப் பழத் தோட்டத்தில் தமிழக விவசாயத் துறை இயக்குநர், திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் தென்னம் பிள்ளை நடும் காட்சி.

பட்டுக்கோட்டை மாவட்டத்தில் சூரப்பள்ளம் கிராமத்தில் ஆகஸ்டு மாதம் 22-ம் தேதி யன்று, கிராம விவசாயிகளுக்கு மானியத் தொகையில் ஸ்பிரேயர்களும், போஸ் கலப்பை களும் பசுந்தாளுர விதைகளும் வழங்கப் பட்டன. இதையொட்டி, சூரப்பள்ளம் கிரா மத்தில் ஒரு சிறு வைபவம் நடந்தது. இவ் வைபவத்தில் தமிழக விவசாயத் துறை இயக்குநர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் கலந்துகொண்டார்கள். விவசாயத் துறை இயக்குநருக்கு கிராமவாசிகள் சிறப்பான தொரு வரவேற்புக் கொடுத்தனர். ஊரி லுள்ள அனைவரும் திருவிழாக் கோலம் பூண்டதுபோல் திரண்டு வந்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் சூரப்பள்ளம் ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில், அரசினர் மான்யம் பெற்ற பஞ்சாயத்துப் பழத் தோட்டத்தில் தென்னம்பிள்ளை ஒன்றை விவசாயத்துறை இயக்குநர் அவர்கள் நட்டார்கள். ஒவ்வொரு பஞ்சாயத் துக்கும் அதன் புறம்போக்கு நிலங்களில் பழத்தோட்டம் போடவும், அல்லது தென்னம்பிள்ளைகள் நடவும், ஈட்டு மான்யத் தொகையின் கீழ் உதவி கிடைக்கிறது. அதன்படி மூன்றில் இரண்டு பங்கு செலவை அரசினரும், மூன்றில் ஒரு பங்கு செலவை பஞ்சாயத்தும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதனால் பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருமானம் கிடைக்க வழி கோலப்படுகிறது.

இதன் பிறகு ஊராட்சி நெற்களம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நடந்தது. விவசாயத் துறை இயக்குநர் அவர்கள் நெற்களத்திற்கு அடிக்கல் நாட்டி விட்டு, இதனால் சூரப்பள்ளம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பலனைப்பற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனக்குச் சொந்தமான நெற்களம் ஒன்றை அவசியம் கட்டிக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். நெற்களம் கட்டுவதற்கு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அரசினர் கடன் சலுகைகள் அளித்து வருகின்றனர். ஒரு நெற்களத்திற்கு சுமார் ரூ. 1,250 வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. இதன் அளவு 100 அடி × 100 அடி கொண்ட சதுரமாகும்.

சூரப்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர், தமிழக விவசாயத் துறை இயக்குநர், மற்றும் ஏனைய அதிகாரிகள்.

பின்பு, அலங்கரிக்கப்பட்ட பந்தலில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சூரப்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர், திரு. கே. ராமய்யா வேளாளர், கூட்டத்திற்குத் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினர். விவசாயத் துறை இயக்குநர் அவர்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின் குறிக்கோளையும், அதனால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பலன்களையும் எடுத்துக் கூறினர். திருந்திய சாகுபடி முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். "கால்சியம் அமோனியம் நைட்ரேட்" என்ற புது உரத்தைப் பற்றியும், அதனை அதிக அளவில் விவசாயிகள் உபயோகிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.



தமிழக விவசாயத்துறை இயக்குநர் ஊராட்சி நெற்களத்திற்கு அடிக்கல் நாட்டுதல்.

கூட்ட முடிவில் விவசாயிகளுக்கு மான்யத் தொகையில் 8 மருந்து தெளிக்கும் கருவிகளும் (ஸ்பிரேயர்), 25 போஸ் கலப்பைகளும், 10 தழை மிதிக்கும் கருவிகளும் விவசாயத் துறை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டன. சீமை அகத்தி விதைப் பொட்டலங்கள் வினியோகிக்கப்பட்டன. மேலும், கிளிரிசிடியா, புங்கம், வேம்பு முதலிய கன்றுகள் குளக்கரையில் நடுவதற்கு வினியோகிக்கப்பட்டன.

பின்பு, தேசீய கீதத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

தென்னை கீழ்நடவு

"பாணன்"

வயது முதிர்ந்த தென்னையின்கீழ்
வளர நடுவது கீழ்நடவாம்
வண்டல் வடிக்கால் அமைந்தநிலம்
வளரும் தென்னைக்குகந்த இடம்
இரண்டு மாதமுன் குழிவெட்டி
எங்கும் குழியை ஆரவிட்டு
நட்டப் பிள்ளை ஆடாமல்
நாளும் காக்க கம்புநட்டு
நட்டத் தென்னையை காப்பதற்கே
நல்ல வேலி தனை அமைக்க
ஆடுதொடா, மூங்கில்வேலி பணத்தால்
ஆகும் கம்பி இரும்புவேலி
பத்து ராத்தல் கலப்பு உரம்
பசுந்தாள் உரத்துடன் கலந்திடுவாய்
வருடம் மூன்று முறை உழுது
வளமாய் பூமிதனை ஆக்கிடுவாய்
ஏழு ஆண்டு கடந்திடிலோ
எல்லை இல்லா இன்பமதை
வளரும் தென்னை பலன் தந்து
வைத்தோன் மகிழ காய்தந்து
தென்னை ஓலை வீடாகும்
தேங்காய் நாறு கயிறுகும்
எந்தப் பொருளும் வீணில்லை
என்பதனை உணர்ந் திடுவீர்
காலம் பலவும் சென்றிடினும்
காய்த்தல் இன்றி நில்லாது
மாளும் வரையில் பலனளிக்கும்
மாண்பை என்னே என்னென்பாய்
சிவப்பு கூண்வண்டு ஒழிப்பதற்கே
சிறந்த மருந்து 'பைராகோன்'
கருந்தலைப் புழுவை 'டி.டி.டி.'யால்
கவலை யின்றியே ஒழித்திடுவாய்
வந்த வண்டும் ஒழிந்திடுமாம்
வளமாய் தென்னை வளர்ந்திடுமாம்
தென்னைக் கீற்றும் அசைந்தாடும்
தேச மெங்கும் வளர்ந்தாடும்
இன்ப இளநீர் தந்தாடும்
எங்கும் நாட்டில் உயர்ந்தாடும்.

கேள்வி அரங்கம்

கேள்வி.—விதை தானியங்களை '810' போட்டு கலக்கலாம் என்கிறார் என் நண்பர். நான் 'அக்ரசான்' தான் போடவேண்டும் என்றேன். இரண்டிலும் எதை எடுத்துக் கொள்ள வேண்டும்? அப்படி எடுத்துக்கொண்டால் எவ்வளவு ராத்தலுக்கு எவ்வளவு மருந்து கலக்க வேண்டும்; அப்படி கலக்கிய தானியத்தை விதைத்து மீதி நிற்கும் தானியத்தை உபயோகப்படுத்தினால் கெடுதல் ஏதாவது உண்டா என்பதை அறிவிக்கவும்.

கு. நஞ்சே கவுடர்,
பவானிசாகர் வட்டாரம்.

பதில்.—விதை தானியங்களை 'அக்ரசானுடன்' கலப்பதுதான் சரி. 'செரசன்' என்ற மருந்தையும் இதற்கு பதிலாக உபயோகிக்கலாம். இவைதான நோய் வராது தடுக்கும் மருந்துகள்.

(810 பி.எச்.சி. என்பது பூச்சி மருந்தாகும்)

30 ராத்தல் விதை நெல்லுக்கு ஒரு அவுன்ஸ் அக்ரசான் (அரை கிலோ கிராம்/ஒரு கிராம் மருந்து).

15 ராத்தல் சோளத்திற்கு ஒரு அவுன்ஸ் மருந்து (சோளத்திற்கு கந்தகமும் உபயோகப்படுத்தலாம்)

15 ராத்தல் பருத்திக்கு ஒரு அவுன்சு.

மருந்து கலந்த விதை கெடுதல் விளைவிப்பதால் மீதி நிற்கும் விதையை உணவுப் பொருளாகவோ, மற்றும் கால்நடை, கோழி முதலியவைகளுக்குத் தீவனப் பொருளாகவோ உபயோகித்தல் கூடாது.

உங்களுக்குத் தெரியுமா?

(விரிவினைப் பிரிவு)

செடிகள் தங்களுக்குத் தேவையான உணவுச் சத்துக்களை மண்ணிலிருந்து, வேர் மூலமாகத்தான் எடுத்துக் கொள்கின்றன என்று கருதப்பட்டு வருகிறது. ஆனால் அண்மையில் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து செடிகளுக்குத் தேவையான சத்துக்களை நிலத்திலிடுவதற்குப் பதில் இலைகளுக்கு நேரிடையாகவே அளிக்கலாம் என்று தெரிய வருகிறது.

உரங்கள் நீரில் கரைக்கப்பட்டு இலைகளின்மேல் நேரிடையாகத் தெளிக்கப்படுகின்றன (Foliar spray). இலைகளுக்கு எவ்வித தீங்கும் செய்யாமலிருக்கும் தன்மையுள்ள இரசாயன உரங்களே இதற்கு உபயோகப்படுகின்றன. உதாரணமாக இம்முறையில் தழைச்சத்தை அளிப்பதற்கு அம்மோனியம் சல்பேட்டைவிட, யூரியா சிறந்ததாகக் கருதப்படுகிறது. தானியச் சத்துள்ள கால்சியம் பாஸ்பேட் உரத்தை இலைகளின்மேல் தெளிக்குமுன் இவ்வுரத்தினுள்ள தனித்த (free) அமிலங்களை அகற்றி இவ்வுரம் நீர்த்த கரைசலாகப் பயிர்களின் மேல் தெளிக்கப்படுகிறது. கடந்த சில காலமாக இரும்பு, மங்கனீசு, மக்னீசியம், துத்தநாகம், போரான் போன்ற சிறு மூலகங்களின் குறைபாட்டால் பயிர்களுக்கு ஏற்படும் நோய்களை உடனடியாகத்தடுக்க இச்சத்துக்களைக் கொண்ட கரைசல்களைப் பயிர்களின்மேல் தெளிக்கும் முறை கையாளப்படுகிறது. பழத்தோட்டச் சாகுபடியில் இம்முறை அதிகமாகக் கடைபிடிக்கப்படுகிறது. ரஷ்யாவில் இம்முறையைக் கையாளுவதால் மகசூல் அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது. தெளிக்கப்படும் திரவம் இலைகளின் மேல் நன்கு படிய, ஒட்டிக்கொள்ளும் தன்மையுடைய சில வஸ்துக்கள் திரவத்தோடு சேர்க்கப்படுகின்றன.

உரங்களை நிலத்தில் இடுவதும், இலைகளின் மேல் தெளிப்பதும்—

* இலைகளின் மேல் தெளிக்க நிலத்திலிடுவதை விட குறைந்த அளவு உரமே தேவைப்படும்.

* கரைசலிலுள்ள உணவுச் சத்துக்களனைத்தும் செடிகளால் உடனே கிரகிக்கப்படுவதால, அவை சிறிதும் வீணாவதில்லை.

* குறிப்பாக, பரஸ்பரச் சத்துள்ள உரங்களை மண்ணில் இடுவதால் அப்பயிர்ச் சத்து பல காரணங்களால் வீணாக வாய்ப்பு இருக்கிறது.

இலைகளின் மேல் தெளிப்பது பற்றிய பல பரிசோதனைகள் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில நடத்தப்பட்டன. விவசாயிகளின் நிலங்களில் யூரியாவை சோளம், ராகிப் பயிர்களுக்கு இலைகளின் மூலம் அளிப்பது சம்பந்தமாக நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் திருப்திகரமாக இருந்தன. மானாவாரி சாகுபடி செய்யப்படும் காலங்களில் மண்ணில் ஈரம் குறைவாக இருப்பதால் நிலத்திலிடப்படும் உரம் எளிதில் கரைந்து பயிர்களுக்கு உதவ தடையாக இருக்கிறது. ஆகவே அப்பயிர்களுக்கு இலைகளின் மூலம் பயிர்ச்சத்தை அளிக்கும் முறையில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இம்முறையில் உரங்களை பயிர்களுக்கு இடுவது சம்பந்தமாக மேலும் அறிய விரும்பும் விவசாயிகள் விரிவினை வல்லுநருக்கு எழுதவும்.

அதிக மகசூலை அடைய

சரியான சத்துப்பொருள்களை

தகுந்த அளவில் கொண்ட

"ஸ்டேன்ஸ்"

கலப்பு உரங்களை உபயோகியுங்கள்

Stanes

மற்ற விபரங்களுக்கு:

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்,

எருவு டிபார்ட்மெண்ட்,

தபால் பெட்டி எண் 12, கோயமுத்தூர்-1.

பேக்டரிகள்:

துடியலூர் (கோயமுத்தூர்).

ஆவணியாபுரம் (மதுரை).

"வழிகாட்டி"

(நாடகம்)

(கே. எஸ். ஆலம்கீர், விரிவிணைப் பிரிவு, கோவை-3.)

காட்சி 10

இடம்.—வீராச்சாமி பெரியய்யா வீடு.

பாத்திரங்கள்.—வீராச்சாமி, கந்தசாமி, வெங்கடசாமி, முத்தையா மாரிமுத்து, மேஸ்திரி, ராஜு.

(வீராச்சாமி சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். கந்தசாமி, வெங்கிடசாமி, முத்தைய்யா முதலியோர் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கின்றனர்.)

வீராச்சாமி.—என்னப்பா கந்தசாமி, மாரிமுத்து வர்ரேன்னுனே, ஆளேயே காணுமே.

கந்தசாமி.—இது தெரியாதா பெரியய்யா, மாரிமுத்து அண்ணே வீட்டுலே எருமை கண்ணுக்குட்டி போட்டிருக்கு. அதுக்கு பருத்திக்கொட்டை பிண்ணுக்கு வாங்கணும்னு கடைத்தெருவுக்கு போயிருக்கு...... இன்னெண்ணில்லே பெரியய்யா......

வீரா.—என்னப்பா அது ?

கந்த.—நம்ப மாரிமுத்து அண்ணனும், டெமான்ஸ் மாஸ்டரு அய்யாவும் இப்ப ரெம்ப செனேகம்....

வெங்கடசாமி.—ஆமா பெரியய்யாவ், எப்பொப் பாத்தாலும் அவரு கூடவே சுத்திக்கிட்டுத் திரியுது. அதுமட்டுமில்லே பெரியய்யா; நம்ப ஜமீன்தார் மகனும், டெமான்ஸ் மாஸ்டருக்கு ரெம்ப செனேகமாம்....

வீரா.—பாத்தையா கந்தசாமி, நாம சொன்னதுபோல நடந்துடுச்சு.

கந்த.—ஏதோ அந்த ஜமீன்தார் பையனே வெவசாய காலேஜிலே சேக்கப்போறதாக்கூட கேள்வி....

வீரா.—ரெம்ப சந்தோஷம். எல்லாம் நல்லபடியா நடக்கணும் அவ்வளவுதான்....

(மாரிமுத்து உள்ளே நுழைகிறார்).

மாரிமுத்து.—என்ன பெரியய்யா......சரவகாசமா....

வீரா.—வாப்பா வா....உனக்கு நூறு ஆயுசு இப்பொத்தான் உன்னைப்பத்தி பேசிக்கிட்டிருந்தோம் ...

மாரி.—இருக்கட்டும்....(உட்காருகிறான்)

வீரா.—ஆமா....என்ன பொய்த்தகம் கையிலே ?

மாரி.—இதுவா 'மேழிச்செல்வம்'னு ஒரு பொய்த்தகம்.. இதுலே நம்ம விவசாயத்தைப்பத்தி எல்லா வெவரமும் போட்டிருக்கு....

வெங்க.—அப்படி என்னத்தப்பா வெவரமா போட்டிருக்கு?

முத்தையா.—படியேம் பார்க்கலாம்.

(மாரிமுத்து மேழிச்செல்வத்தைப் படித்து விளக்கம் செய்கிறான்.)

வீரா.—ஆமா....இவ்வளவு வெவரம் போட்டு வருதே.. இந்தப் பொய்த்தகம் எம்புட்டு ?

மாரி.—அப்படி ஒண்ணும் அதிகமில்லே பெரியய்யா. காரு வாத் துட்டுத்தான்......ரெண்டு வாட்டி வெத்தலே போட்டு துப்புனு தீந்துபோச்சு....

முத்.—பரவாயில்லையே.

வெங்க.—இந்தப் பொய்த்தகம் எப்போ எப்போ வருது..

மாரி.—மாசம் ஒருவாட்டிதான்....

கந்த.—உனக்கு ஏதுண்ணே இந்த பொய்த்தகம்....

மாரி.—நம்ம டெமான்ஸ்மாஸ்டர் ஐயாதான் கொடுத்தாரு. இந்த சங்கதியெல்லாம் தெரிஞ்சுக்கிறதுக்குத்தான் நான் அவரோட சுத்துறேன். இந்தப் பசங்க ஒரு மாதிரியா நினைக்கிறுங்க....அது கெடக்கட்டும் பெரியய்யா, விஷயத்துக்கு வருவோம். அறுவடை நெருங்கியாச்சு. வெள்ளாமை வீடு வந்து சேருமா....

வெங்க.—என்னத்தை வந்துச்சு....எங்கு பார்த்தாலும் நெல்லுக்கு சீக்கு. ஒரு கருதுகூட விடாம கொள்ளை நோய் தாக்கி இருக்கு. என்னத்தை வெளஞ்சு நாலு நெல்லைப் பாக்கப்போறோம் ?

கந்த.—சரி நெல்லுதான் அப்படீன்னு பருத்தியிலே வேர் பூச்சி குடஞ்சுகிட்டே இருக்கு என்ன செய்யறது. நம்ம போறுத காலம்....வருஷம் பூராவும் இப்படியே பூச்சிக்கும், சீக்குக்கும் பயிரை கொடுத்துட்டா நாம என்ன மண்ணை வாரியா சாப்பிடறது......இதுக்கு ஒரு வழியே இல்லையா....

(மாரிமுத்து உள்ளே நுழைந்துகொண்டே)

மாரி.—ஏன் இல்லே. அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வரும் போது அதை அலட்சியப்படுத்தினு மண்ணை வாரி திங்க வேண்டியதுதான்.

கந்த.—மாரிமுத்து அண்ணே, என்ன சொல்றே ?

மாரி.—சொல்றது என்னத்தெப்பா. என் நெலத்தைப் போயி பாரு. ஒரு கருதுலயாவது நோயிருக்கான்னு. நல்ல நேரத்திலே அந்த டெமான்ஸ்மாஸ்டரையா கடவுள்போல வந்து கண்ணைத் தொரந்திட்டாரு. நல்ல பொறுக்கு விதையா கொடுத்தாரு. வாங்கி வெதைச்சேன். அவரு சொன்னபடி கேட்டேன். கடவுள் புண்ணியத்திலே இந்த தடவை நல்ல வெள்ளாமை கண்டிருக்கு. அவரு வரும்போது நீங்களெல்லாம் அவரை அலட்சியப்படுத்தினீங்க. அவர் பேச்சக் கேக்கலே....அதனலே இப்போ அவதிப்படுறீங்க. நான் ஒண்ணுகேக்குறேன். ஜெமீன்தாரு ஜெமீன்தாருன்னு அடிச்சிக்கிறீங்களே....இப்போ வெட்டி வச்ச

வாழைதாருமாதிரி குந்திகிட்டு இருக்கீங்க....வருஷா வருஷம் இப்படி நஷ்டப்படுறேமே ஜமீன்தாரா கை கொடுத்துக் காப்பாத்தருரு....

கந்த.—அண்ணே, ஜமீன்தாரய்யா......காப்பாத்தல்லே நெசந்தான்....ஒத்துக்கிறேன்......என்ன செய்ய இருக்கு....அவருடைய நெலம் அவரை நம்பித் தானே ஆகணும்....

மாரி.—அட சும்மா இருப்பா. நெலத்தை உழுது வெவ சாயம் செய்யாட்டி நெலம் சோறு போடுமா..பாடு பட்டாத்தாம்பா பலன்....இங்கே பாடுபட்டும் பலன் இல்லே...அதுக்குத்தான் சொல்றேன்...டெமான்ஸ் டிரேட்டர் ஐயா சொல்றபடி வெவசாயம் செய்யுங் கோன்னு....

கந்த.—மாரிமுத்தண்ணே..நம் மனம்போல விவசாயத் திலே அனுபவம் இருந்தா ஏதோ அந்த மனுஷன் சொல்றதையும் கேக்கலாம். மடிப்புக் கலையாத சொக்காயும், கால் சட்டையும் போட்டுட்டு ஏதோ வெவசாயத்தை வெளையாட்டா நெனக்கிற சின்ன பசங்கபேச்சை எப்படியப்பா நம்பறது....

வீரா.—மாரிமுத்து....கந்தசாமி சொல்றதும் எனக்கு நியாயமுன்னுதான்படுது....

மாரி.—பெரியய்யா, நீங்க பெரிய மனுஷன். உங்க வார்த்தை தலைமேலே. நான்கூட இப்படித்தான் நெனச்சேன். ஆனா, கோயமுத்தூருக்கு ஒருவாட்டி போனேன். அங்கே காலேசிலே படிக்கிற பசங்களும் வெவசாயம் செய்யறாங்க. அவுங்களுக்குன்னு கொஞ் சம்நெலம் ஒதுக்கிகொடுத்திருக்காங்க. கலப்பை பிடிச்சு உழுகறதிலே இருந்து கதிரடிச்சு மூட்டை கட்டற வரைக்கும் அவங்களே செய்யறாங்க. அவுங்களுக்கு வெவசாயத்திலே தெரிஞ்சதுலே பாதிகூட நமக்கு தெரியாதுன்னு நெனைக்கிறேன்....

எல்லோரும்.—அடெ காலேஜி பசங்க கலப்பை புடிச்சு உழறாங்களா....அதிசயமா இருக்கே....

மாரி.—இதுமட்டுமா இன்னும் எவ்வளவோ இருக்கு. இது பாருங்க, நாமெல்லாம் அந்த ஐயா சொல்றபடியே வெவசாயம் செய்வோம்....ஜமீன்தாருக்கு பயந்து பட்டினி கிடந்து சாகவேண்டாம்.

வெங்க.—மாரிமுத்தண்ணன் சொல்றதும் நெசந்தாப்பா இப்போ கஷ்டப்படுறது யாரு....வெளைஞ்சுதோ வெளையலையோ ஜமீன்தாருக்கு குத்தகை..ஒரு மணி நெல்லாவது கொறைக்கமாட்டார் மனுஷன்..அது மட்டும் இல்லே நானும் இந்த வெவசாய ஐயா வந்ததிலே இருந்து பாத்துட்டுதான் இருக்கேன். ஒரு நாள் அப்படியே என் வயல் பக்கம் வந்தாரா. சுத்திப் பார்த்துக்கிட்டே போனாரா. திடீர்னு செருப்பை கழட்டினாரு என்னமோ செஞ்சாரு..மனுஷன் போட்டாரு. அப்புறம் நான் என்னதான் செஞ்சா ருன்னு பார்க்கப் போனேன். தண்ணி கரையை ஒடச்சுட்டு ஓடிக்கிட்டிருந்திருக்கு..மனுஷன் அதை அடச்சுட்டுப் போயிருக்காரு. ரொம்ப நல்ல மனுஷன்.

மாரி.—அதுமட்டுமில்லேப்பா. என் நெலத்திலே ஏதோ ஒண்ணு ரெண்டு கோரையை பாத்துட்டாரு. அதை பிடுங்கப் போயி கையை அறுத்துட்டாரு. அவ்வளவு நல்லவங்க நமக்கு கெடுதல் நெனைப்பாங்களா.. துணிஞ்சு அவர் உதவியை நாடுவோம்.

(மேஸ்திரி நுழைதல்)

எல்லோரும்.—வாங்க மேஸ்திரி வாங்க.

மேஸ்திரி.—நீங்களெல்லாம் இப்படி உட்கார்ந்து வாய்ப் பந்தல் போடத்தான் லாயக்கு..இந்த ஜமீன்தாரய்யா நமக்கெல்லாம் எவ்வளவு எடஞ்சல் பண்றாரு. இதை எல்லாம் தெரிஞ்சு பேசறீங்களே..என்ன சாதிச்சீங்க. நான் ஒண்ணு கேக்குறேன் பதில் சொல்லுங்கய்யா பார்க்கலாம்..இன்னிக்கு நீங்கள் எல்லோருமேசேர்ந்து நாங்களெல்லாம் விவசாய ஆபீஸர் சொன்னபடிதான் விவசாயம் செய்வோம், இல்லே எங்களுக்கு நெலம் வேண்டாமுன்னு ஒரு வார்த்தை சொல்லுங்கோ.. அப்புறம் ஜமீன்தாரய்யா என்ன செய்யறாருன்னு பாப்போம். அவரு சீமையிலே இருந்தா ஆளுகளைக் கொண்டு வந்து விவசாயம் செய்வாரு....உங்களைத் தான் ..கெஞ்சுவாரு..என்ன எல்லோரும் முழிக் கிறீங்க....

(ஜமீன்தார் மகன் ராஜு உள்ளே நுழைகிறார்)

எல்லோரும்.—வாங்கய்யா..வாங்க..உக்காருங்க....

வீரா.—ஏது இவ்வளவு தூரம்.

ராஜூ.—மேஸ்திரி சொல்றது அருமையான யோசனை.

வீரா.—(ஆச்சரியத்தோடு) என்னங்க இது! ஆச்சரியமா இருக்கே....

ராஜூ.—ஆச்சரியமாத்தான் இருக்கும். அப்புறம் எல்லாம் சரியாப் போயிடும்....

மாரி.—ஐயா கொஞ்சம் விவரமாச் சொல்லுங்களேன்....

ராஜூ.—எங்க அப்பாவைத் திருத்தணம்னு எவ்வளவோ முயற்சி பண்ணினேன். ஆனால் அவரு தன்னுடைய பத்தாம் பசலித்தனத்தை விட்டுக்கொடுக்கறாப்புலே இல்லே, அதனாலே நீங்க எல்லோருமே வந்து மேஸ்திரி சொன்ன மாதிரி சொன்னீங்கன்னா....

கந்த.—ஐயையோ நம்மளாலே முடியாது சாமி.

வீரா.—தம்பி, உங்க அப்பாவோ நம்ம ஊருக்கு பெரிய மனுஷன். அவருகிட்டே போய் நறுக்குன்னு நாலு வார்த்தை பேசி முகத்தை எப்படி முறிச்சுக்கிறது.

ராஜூ.—அதெல்லாம் ஒண்ணும் பயப்படவேண்டாம். நீங்களெல்லாம் வந்து சொல்லுங்க. எதுவும் தவறு நடக்காதபடி நான் பார்த்துக்கொள்கிறேன். தெரியத மனுஷனை தெரிய வைக்கணும், அவ்வளவு தானே.....

வீரா.—பின்னே என்னப்பா, சின்னஎஜமான் தைரியம் கொடுக்கறதுனாலே நீங்களெல்லாம் போய், ஐயா வெவசாயம் செஞ்சா டெமான்ஸ்மாஸ்டரு சொல்ற மாதிரிதான் விவசாயம் செய்வோம். இல்லேன்னா நெலம் வேண்டாம்..நாங்க வெவசாயமும் செய்ய லேன்னு பணிவாச் சொல்லிவிட்டு வாங்க..... மேக்கொண்டு சின்ன ஐயா கவனிச்சிக்கிடுவாறு....

எல்லோரும்.—சரிங்க பெரியய்யா....

(போகின்றனர்)

(திரை)

(தொடரும்)

அவசரம்
அவசரம்
அவசரம்

கடுமையான சுரம். உடல் நிலை கவலைக்

கிடமாயிருக்கிறது... உடனே செய்தி அனுப்ப வேண்டும்

அதற்காகவே "ப்ரயாரிட்டி" தந்தி உள்ளது

நோய், விபத்து, மரணம் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் "ப்ரயாரிட்டி" தந்தியை உபயோகியுங்கள்.

எல்லா எக்ஸ்பிரஸ், அவசர தந்திகளைவிட இது வேகமாகப் போய்ச்சேரும். செலவும் அதிகம் இல்லை. வழக்கமான எக்ஸ்பிரஸ் தந்திக்கு உள்ள கட்டணம்தான் இதற்கும்.

தந்தியை அனுப்பும்போது மட்டும் "ப்ரயாரிட்டி" என்று குறிப்பிடுங்கள்

உங்களுக்கு சிறந்த முறையில்

சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA/62/188

விவசாயப் பெருமக்களுக்கோர் சமர்ப்பணம்

[ஆர். நடராஜன், (L.A.G.E.), விவசாயப் பொறியியல் மேற்பார்வையாளர் ; ஜே.ஆர். டிவாஸ், பி.இ., உதவி விவசாயப் பொறியாளர், கோவை.]

விவசாய பெருங்குடி மக்களே! தன்னலங் கருதாத் தனிப்பெருந் தியாகிகளே! நாட்டின் நலங் காக்கும் நல்லோரே! தமிழகச் சிறப்பையும், செழிப்பையும் நிலை நாட்டும் வல்லமை படைத்தவர்களே! உங்களுக்கோர் சமர்ப்பணம் !!

காடுழுது, மேடுழுது, கட்டாந்தரையுழுது கன்னித் தமிழகத்தின் மேனியைச் கட்டிக் காத்துப் பண்படுத்திய பெருமை உங்களுக்குத்தானுண்டு. உங்களைச் சார்ந்து தானே மற்றவர்களும், மற்றவைகளும் செயல்படவேண்டி யிருக்கின்றன. இது குறித்து வள்ளுவப் பெருந்தகை "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று வெகு அழகாக எழுதி வைத்ததை நிலைநாட்டி, மெய்ப்பித்து, தமிழக மக்களிலே தலை சிறந்தவர்களும் நீங்கள்தான். அதோடு கூட தமிழ்க் கவி பாரதியார் உங்களை மறந்து விடவில்லை. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்றதையும் நீங்கள் மெய்ப்பித்து விட்டீர்கள்.

ஆகவே, பெருமக்களே! உங்களைப் பாராட்டுகின்ற முறையில் நம் தமிழக அரசாங்கம் குறிப்பாக விவசாயத் துறைக்கு முதலிடம் கொடுத்து உணவுப் பற்றுக்குறையைப் போக்க பல திட்டங்களை வகுத்து அதற்கென தனி இலாகாவை ஏற்படுத்தி அரும்பல பணிகளைப் புரிந்து வரு கின்றது. நாகரீக உலகத்திலே நாமும் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையிலே பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து, அதற்கெனப் பல கோடிக் கணக்கான தொகையை ஒதுக்கிப் பலநன்மைகளைச் செய்து வருகிற தென்றால் நீங்கள் அந்த நன்மைகளை அடையத்தானே வேண்டும். அப்போதுதானே நாடும் செழிக்கும், நாமும் வாழ்வோம்.

இந்தத் துறையிலே உங்களுக்கென சேவை செய்து வருவது கோவை விவசாயக் கல்லூரியில் இருக்கும் "டிராக்டர் தொழிற்சாலை (Tractor Workshop)" ஆகும். அங்கே உங்களிடமுள்ள விவசாய சம்பந்தமான எல்லாக் கருவிகளையும்-உபகரணங்களையும் பழுது பார்த்துக் கொடுக் கப்படுகிறது. அதைப் பற்றிய சிறு குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

1. மண் உழுவதற்குப் பயன்படுத்தும் எல்லா ரக இயந்திரங்களையும் (all kinds of Tractors) முழுப்பழுது பார்த்தும் (Major over-haul), சிறு பழுது பார்த்தும் (Minor Repairs) தேவையில்லாப் பழம் பகுதிகளைக் களைந்து விட்டு புதுப் பகுதிகளைப் பொருத்தி நல்ல முறை யிலே மறுமுறையும் நீடித்து உழைக்குமாறு செய்து கொடுக்கப்படுகிறது.

2. விவசாயக் கருவியைச் சேர்ந்த கலப்பைகள் (Ploughs), கலப்பைக் கொழுக்கள் (Share Points), மண் வாரி (Bund Former), தட்டை வெட்டும் கருவி (Chaff Cutter), நெல், சோளம், ராகி போன்ற தானியம் அடிக்கும் கருவிகள், மண் உடைக்கும் கருவிகள் போன்ற எல்லாவிதக் கருவிகளையும் செவ்வனே சீர் பார்த்துக் கொடுக்கப்படுகிறது.

3. எல்லாவித ஆயில் இன்ஜின்களும் (all kinds of Oil Engines), மின்சார மோட்டார், பம்பு செட்டுகள், ஸ்டார்டர்கள் ஆகியவைகளையும் பழுது பார்த்து தரப்படு கிறது.

4. மின்சார மோட்டார் (Electric Motor) இவைகளை நல்ல முறையில் 'ரிவைண்டிங்' செய்து கொடுக்கப்படு கிறது. நல்ல வேலைப்பாடு, நீடித்த உழைப்பு.

ஆகவே, விவசாய சம்பந்தமான எவ்விதக் கருவிகள் உங்களிடம் இருந்தாலும், நீங்கள் உடனே "கோவை டிராக்டர் தொழிற்சாலை" உதவி விவசாயப் பொறியாளர் அவர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு, ஆலோசனை கேட்டு சிறந்த முறையில், குறைந்த செலவில் அவற்றை பழுது பார்த்து நன்மை அடையலாம் என்ற கருத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

இதுகாறும் பல விவசாயப் பெரு மக்கள் இங்கு வந்து தங்கள் மண் உழு இயந்திரங்களையும் (Tractors), மற்ற விவசாயக் கருவிகளையும் டிராக்டர் தொழிற்சாலையில் கொடுத்து, அவற்றில் நல்லமுறையில் வேலைப்பாடுகள் செய்து கொடுத்தமைக்குத் தங்கள் நல் அபிப்பிராயங்களை நல்கியிருக்கிறார்கள்.

ஆகவே, விவசாயப் பெருமக்களே, உங்கள் குறைகள் நீங்க உடனே டிராக்டர் தொழிற்சாலையினை அணுகி, உங்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெற்று, உங்கள் விவசாயக் கருவிகளைப் பழுது பார்த்து நன்மைகளை அடைய வாருங்கள், வாருங்கள் என வரவேற்று இந்தக் கருத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்!

—

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1962

சென்னை மண்டல கட்டுப்பாடு இரசாயன கூடத் திறப்புவிழாவும் வர்த்தகத்துறை கருத்தரங்கும்



மத்திய விவசாயத்துறை அமைச்சர் டாக்டர் ராம்சுபா சிங் அவர்களை, மாநில விவசாய அமைச்சர், உணவு விவசாயத் துறை செயலாளர், விவசாயத்துறை நெறியாளர் முதலியோர் வரவேற்கிறார்கள்.

மண்டல விவசாய வர்த்தகத்துறை கருத்தரங்கு அமைச்சர் திரு. ஜி. பூவராகன் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.